வைத்திய அட்டவணை
(கைமுறை வைத்தியம்)

137

264

264

****

குப்புசாமி செட்டியார்,

காவேரிப்பட்டணம்,

வைத்திய அட்டவணை (1)

கட்டு-1.

கைமுறை வைத்தியம் (1)

****

Total Typed Pages 26

Verified 6-4-63

Sunderanandan 6.4.63

Bundle No (1)

Kaveripatnam Kuppusami Chettiar

264

தேதி: 14.2.63

புத்தகத்தின் பெயர்:- கைமுறை வைத்தியம் (1)

உரிமையாளரின் பெயர்:- குப்புசாமி செட்டியார்.

இடம்: காவேரிபட்டினம், சேலம்.

*****

தந்த வியாதிக்கு வாய் கொப்பளிக்கு:-

கண்டுமே நாவற்கன் காலிப் பட்டையும்
வேண்டு நற் சலம் விட்டு றவான பின்
கொண்டு நீர்தனைக் கொப்பளிக்கைந்து நாள் -
முண்டு வாய் வாதமோடும் பொய்யல்லவே.

அல்ல வேலம் பட்டை யாவாரம் பட்டை
செல்ல வோர் செல்ம் சேர்த்திடித்தா ரிடில்
நல்லவோர் ரெட்டு நாட் கொப்பளித்திட
வெல்லவே தந்த வாதமுந் தீருமே.

நீருஞ் சுக்கது தேறிய பாக்குடன் ஏதம் வாயினிலிட்டுமே மெல்லிடில் மீதந்த மிகக் கடுப்பே நீர் பாரும் கொப்பளிக்கப்படும் பஞ்சமே தந்த வாயுவுக்கு வேது அஞ்சு வாத மடங்கிச் தழுதாழை கொஞ்சி நொச்சிக் கொடித்திடில் வேதுதான் மிஞ்சி நீரில் மிளகு ஊனயின் வேர் பஞ்சு போலரை பத்து மேலேத்திடே.

மேகத்துக்கு:- தன்று மாவிலிங்கப் பட்டை, தன்னிடை, விர்ரு மீர் பலமே யரை மோரு டன், கொன்று மைந்து தினம் கொள்ள மோரன்னம், தள்ள மேக மெடு பட்டு லோடுமே

பீனிசத்துக்கு மருந்து:- ~~ஸ்ரீ~~ 4 ஸ்ரீ மாதளங்காய் ஒன்று கொண்டு வந்து விரையை எடுத்து தனி யில் போட்டு பிழிஞ்சு இந்த தண்ணீர் நாசிக்கு ஊத்தவும். கை கண்டது.

கண்ணீர் நீர் வடிதலுக்கு:- கறிவேலன் இலை, காசுக்கட்டி பொடி செய்து தறண்டியில் காய்ச்சி சீனிக்காரம் நெற்பொரி மாவாரைக் குச்சி கலந்து கண்களுக்கு சுத்தும் பூசவும். புளியிலையை வேக வைத்து கண்ணுக்கு ட்டவும்.

கண் வலிக்கெல்லாம்:-

புன்னைக்கு யிலை கோளங் கட்டி பழம் புளி இதக்கலைக் கட்டி காலை மாலை போடவும். நாலு நாள் முழுகி வரவும். பத்தியம் புளிப்பு புகை தள்ளவும்.

வயிற்று வலிக்கு:- not complete தார் முருங்கையின் தனிரிலைரைப் பலம்; மோர் வெள்ளரிக் கடுக் காயொரு பலம், நேரறைத் தாமரைக் கென்னெய் சரியிடை கோரரைத்தரா முழப்பி யுன் முத்திதே இ

இடுப்பு பிடிப்புக்கு சிட்டகா மருந்து கை கண்ட மருந்து:- not useful உப்பு காரிலே யிருக்கும் தன் வண்டு சோடு பிடித்து காடா துணியிலே போட்டு பிழிஞ்சு அந்தரலே கலந்து வைத்துக் கொண்டு வலது கை அக்குளு அந்த அத்தரை விரலிலே எடுத்து நரம்பு பார்த்து தெறிக் கவும். ஞாயிற்று கிழமை தினம் இது பண்ணவும். இது செய்யும் போது பூசை தேங் எலுமிச்சம் பழம் பரு ணாயிலை. எ வைத்து கொண்டு கிணத்தில் போடவும்.

தாக வாந்திக்கு:-

- நெல்லுப் பொரி, சுக்கு ~~வசம்~~ வெட்டி வேர் இதுகளை காய்ச்சி குடிக்கவும்

சுரத் தியாழுத்துக்கு:-

வேப்பம் பட்டை தான் பலம். ச, சங்கம் பட்டை தான் பலம். க, மிளகுறணை பட்டை தான் பலம். உ, பாப்பாரமுள்ளி வேர் பலம். க, சித்திர மூலம் பலம். க, நொச்சி வேர் பலம். க, வில்வ வேர் பலம். க இதுகளை கசாயம் செய்து கொடுக்க சர்வ சுரம் தீரும். சுத்தி செய்த சர்க்கரை கூட்டவும் .

பேது கோட்டு நோயிக்கு:- தள்ளடா கரிச்சான் பட்டரைப் பலம் வில்லடாவின் பால்

விட்ட வித்தே யரைத் தள்ளடா புளியோடு வாய் பிசைக கொள்ளடா பேதி கோட்டு நோய் தீருமே

பேதிக்கு வேறு விதம்:- நோளைப் பட்டை கரும் சீரகத்தை வறுத்து இதில் போட்டு ௩ வேளை கொடுக்கவும்.

தாது புஷ்டிக்கு:- பூனைக் காஞ்சொறி விரை.க, இசு நிலப் பனைக் கிழங்கு பலம்.க, சீனி சர்க்கரை பலம்.க, பொடி பண்ணி கலந்து தின்னவும்.

நாக்கில் வைத்து உடனே எலுமிச்சம் பழம் சார் கொடுக்க உடனே நிற்கும்.

ஆடு எழும்பாமல் மருந்து:- தும்மரத்தை வெட்டி வந்து குழல் போலே தோண்டி அரணையை பிடித்து அதுக்குள்ளே போட்டு புதைக்கவும். பிற்பாடு எப்ப வேணுமானால் புகையல் எடுத்தால் ஆடுகள் எழும்பும். கை கண்ட மருந்து.

அரையாப்புக்கு:-

தீரு மின்னமுஞ் செப்புரேசத்திரி நீரு மேல் நெருப்பைப் பறித்தரை ஆறு போதரையாப் பிலிருச்சிடில் ஏறுங் கட்டி யிளகி விட்டோடுமே. கிரந்தி அரையாப்புக்கு எண்ணெய்:- செப்பப மெள்ளை தெளிவுடன் மாந்தருக்கு ஒப்புஞ் சங்கொடு சங்கங் குப்பியுடன் வெப்பு நொச்சி வெள்ளருகுடன் வன்னியும் கப்புங் கிரந்தியின் நாயகங் காரமே.

அரையாப்புக்கு:- கொடிவேலி வேர் ஒரு பாக்களவு அரைத்து கோழி முட்டை வெள்ளை ...* ...* தன் அம்பிரியில் குழப்பி கொள்ளவும். கருப்பான் புளி புகை போகம் தள்ளு.

அரையாப்புக்கு மருந்து:-

முளகோடு வப்பு சீரா தென்னை யோடு நெய்யுமாகும்உ-வது வெள்ளை தனை காசிடை தான் மெழுகிட்டி வில்லை தட்டி வெதுப்பி கட்ட யிருந்த இடம் தெரியாமலேகும் பாரே

சிறு நீரிறங்க:- கொண்டிடு முருக்கொத்தானிடைப் பலம் புண்டிடும் வெள்ளைப் பூண்டிடரைப் பலம் வேண்டிடு மரைத்திவ்வித மூன்று நாள் கண்டிடுஞ் சிறு நீர்க் கட்டிறங்குமே.

நீரிழிவுக்கு:- பார்த்திடாய் நற்பாலுமுக்கா மதில் கார்த்திடாய் சத்திச் சாறணை வேர் பலம் சேர்த்திடா யரைத்திவ்வித மூன்று நாள் ஏர்த்திடார்த்த நீரிழிவோடுமே.

அடிக்கடி நீர் இறங்குகிறது நிற்க:- வெட்டி வேர் பலம்.க, பனை வேர் புடி.க, பற்படாகம் புடி.க, அதிவிடையம் பலம்.க, இந்துப்பு பலம்.ரு பரங்கிப் பட்டை பலம். கொத்தமல்லி பலம்.வ, சூரணித்துச் சர்க்கரை கூட்டி தின்ன நிற்கும்.

நீர்க் கட்டுக்கு:- வெடியுப்பு பலமொவொன்று அண்ட வோட்டில் வைத்து மூடி பற்பம் செய்து கிழங்கின் நீரில் நீர்கள் போமே.

சேத்தும வெள்ளைக்கு:- மேதமாய் வெண்காரங் கழஞ்சிடை யேகமாய்ப் பொரித்தே பொடித்தே யுடன் பாகமா யேழு போது பகர்ந்துண்ண வேகமாஞ் சேத்தும வெள்ளையுந் தீருமே.

வெள்ளைக்கு:- கீழா நெல்லித் தழை பலம்.உ, வெள்ளைக் குங்கிலியம் பலம். கலந்தரைத்து எ நாள் உள்ளுக்கு கொடுக்க வெள்ளை நிற்கும். கடும் பத்தியம். உப்பாகாது.

வெள்ளைக்கு (வேறு):- வெடியுப்பு விராகனிடை.க, கற்பூரம் விராகனிடை.ரு, இதை நீக்க அரைத்து பொட்டணங் கட்டி அந்தி சந்தி ௩ நாள் கொடுக்கவும். வெள்ளாட்டுக் கறி இச்சா பத்தியம்.

இரத்த கசாயம்:- கீழாநெல்லி, சிறு அம்மான் பச்சரிசி, சிறுகீரை, முள்ளங்கி இதுகள் கசாயம் செய்து ௩ வேளை கொடுக்கவும்.

கிரந்திக்கு மருந்து:- ரசகற்பூரம் விராகனிடை.க, லவங்கம் விராகனிடை.க, மிளகு விராகனிடை.க, வாய்விளங்கம் விராகனிடை.க, இது வெல்லம் செம்பருத்திச் சார் விட்டு அரைத்து உருண்டை பண்ணி எ நாளைக்கு சாப்பிடவும். இதற்கு பத்தியம் வறுத்த உப்பு நொய் சோறு சாப்பிடவும்.

மேற் சுவாசத்துக்கு:- தோத்திடுப்புச் சோர், நெல்லிக்காயோடு, சேர்த்திடு நல் மிளகொடு திப்பிலி மார்த்திடு கடுகு வகைக்குச் சமன் ஓர்த்திடுப் பசு மோரில் விட்டாட்டு தேன் குரு முறை சுட்டடா மேல் சுவாசம் விட்டோடிடும் போட்டடா புளியும் புகை தள்ளிடே.

மேல் சுவாசத்துக்கு:-

முருங்கியிலைச் சார் பலம்.உ, மிளகு பொடி பலம்.வ, பசு மோர் பலம் .உ இதை கலந்து கொடுக்க மேல் சுவாசம் நிற்கும்.

போகிக்கு மருந்து:- வெள்ளை எருக்கும் பஞ்சினில் மனித்தக்காளிச்சாறு இநய் விட்டு விளக்கேற்றி வைக்க போகிக்கும்

(வேறு) செம்பருத்தி பஞ்சியை வெள்ளெருக்கும் பால் ஊட்டி திருத்த் உன்ற ஙவைத்து விளக் கேற்ற போகிக்கும். இது கை கண்டது. not useful

ஜன்னிக்கு:- ஆட்டு நொச்சிப் பட்டை, முருங்கைப் பட்டை, காட்டு மாவுலிங்கப் பட்டை வெள்ளியிலை, ஆட்டுச் சாரி, பிறிந்தார சுரசத்தில் கூட்டு ஜன்னி குதித்தோடுங் கண்டிடே.

கால் பிடிப்புக்கு மருந்து:- வொருகரு மேற்கல் பெருங்காயம் விராகனிடை.க, கல்லுப்பு விராகனிடை.ரு இதுகள் இடித்து ஏழு நாளைக்கு சாப்பிடவும். மோடி விராகனிடை உ, வெல்லம் பலம்.உ சூரணம் பண்ணி சாப்பிடவும். இச்சா பத்தியம்.

நீர் யெரச்சல் இறங்க:-

முள்ளங்கி கிழங்கின்

முள்ளிந்கெழுங்கினிட் சாரும் யேழு காரமும் கொடுக்கவும். மலம் சலங் கட்டினுல் மங்காத குழல் மடவீர் சொல்லக் கேளீர் வாயுவினுல் சிற்றின்ப மதிமாலுல் தங்கி நின்ற விறவாயுங் கட்டிக் கொள்ளும். தாரணியில் மானிடர்கள் சனிக்க மாட்டார் வெங்காரஞ் சவுக்காரம் சீனிக்காரம் வெண் மதியா மிந்துப்பு வெதுப்பிக் கொண்டு, சிங்கார யிள நீரில் கொள்வீராகில் சிக்காது: மலசலங்கள் நின்றும் தானே

முள்ளங்கின்

நீர் கட்டினுல்:- பொரித்த வெங்காரமும் ~~[illegible]~~ ரசமும் கொடுக்க நிற்கும்.

மண்டை குலைக்கு தயிலம்:- சித்தரத்தை பலம்.க, வெட்டி வேர் சேர்.ய இதை கசாயமிட்டு மாதளங்காய் சமூலம் இடித்த ரசம் படி.வ, நொச்சிச் சார் படி.வ, விடைத் தாரைப் பட்டை பலம்.உ இதுகளை பசு நெய்யில் விட்டுக் காய்ச்சி முறுகி வர மண்டை குலை தீரும்.

குன்மத்துக்கு கசாயம்:-

கூவளி

சுக்கு, தொட்டிவேர், வேலி, விலாமிச்சு, சந்தனம், கூவலை, இதுகளை பொங்க வைத்து கொடுக்கவும்,

கலியாண பூசனி லேகியம்:- .பசும் பால் படி.உ, இளநீர் படி.உ, மாதளம் பழம் சார் படி.வ இது இரண்டும் சட்டியில் வார்த்து பூசினிக்காயை பூப்போலே திருகி அதில் போட்டு மெழுகு பதமாய்க் காய்ச்சி இறக்கி சந்தனம் கொத்தமல்லி, சீரகம், இதுகள் வகைக்கு வ பலம், அதிமதுரம் பலம்.ங, பூமி சர்க்கரை கிழங்கு பலம்.ங, இதுகளை இடித்து பொடியாக்கி சர்க்கரை பலம்.உய பாகு செய்து பசு நெய் அரைப்படி விட்டு பொடியை கொட்டி எல்லாங் கலந்து ஏலம் விராகனிடை.ச பொடித்துப் போட்டு லேகியம் செய்து அந்தி சந்தி கொட்டைப் பாக்களவு கொள்ள சர்வ மேகம் தீரும்.

ஒரு தலைவலிக்கு:-

சுக்கு பலம்.உ, நீக்கி நாழி ஜலத்தில் விட்டு குறுக்கி காய்ச்சி தேங்காய் பால் படி விட்டு குங்குமப்பூ விராகன்.க போட்டு காய்ச்சி நாசியில் நசியமிட ஒரு தலை வலி மண்டை குத்து இதுகள் தீரும்.

தலை வலிக்கு:- கொடுவேலி வேர் பலம்.க, கத்தாளை பால் விட்டு அரைத்து நல்லெண்ணெய் ஒரு படியில் போட்டு காய்ச்சி தலையில் தேய்த்து முழுகி வர தலைவலி மண்டை இடி குத்து தீரும்.

பித்த சூட்டுக்கு எண்ணெய் :-

ஆனை நெருஞ்சி கீழாநெல்லி, நீர் இலைத் தாமரை, கொத்த மல்லி, சீரகம், சிறுமுள்ளி இதுகள் கசாயம் செய்து கசாயத்துக்கு சரியாக எள் எண்ணெயை சேர்த்து மெழுகு பதமாக காய்ச்சி ஸ்நானம் செய்ய உஷ்ணம் தீரும். எண்ணெயில் அந்த கசாயத்தையும் உள்ளுக்கு 3 வேளை கொடுக்கவும்.

சோபைக்கு :-

வெங்காரம் பலம். க, வெடியுப்பு பலம். க இது இரண்டையும் கரண்டியிலிட்டு உருக்கி பின்னே செய்து சோபை கசாயம் போட கேட்கும். ~~வருதைய்ய வைத்தியார் முறை.~~

மஞ்சள் வெள்ளைக்கு :-

பூனைப் புடுக்கு காய் வேர் கொண்டு வந்து நறுக்கி ஊற வைத்துப் பிசைந்து சக்கை எறிந்து அதில் சீரகம் சர்க்கரை கலந்து ஒரு வருஷம் வெள்ளைக்கு ங. நாள் ரு வருஷம் வெள்ளைக்கு எ நாள் கொள்ளவும். கடும் பத்தியம் இச்சடி நெய் கூட்டவும்.

ரத்த வெள்ளைக்கு :-

பொடுதலைச் சாறு. ச, நல்ல எண்ணெய். உ பாகங் கூட்டி சூரிய புடம் வைத்து. ங 3 நாள் 6 வேளை கொள்ளவும். கடும் பத்தியம். மறு பத்தியம் உப்பு. மறு பத்தியத்தில் வறுத்து கூட்டவும்.

வெள்ளைக்கு :- முடக்கொத்தான் பிஞ்சு, வெள்ளரி விரை, சம்பு நாகன் விரை சமன் சேர்த்து 3 நாள் கொள்ளவும். இச்சா பத்தியம்.

வெள்ளைக்கு சூரணம் :-

சந்தனம், அகிற் கட்டை, ஏலம், லவங்கப் பட்டை, கிராம்பு, சோம்பு, அதி மதுரம், செப்பாலை, தேற்றான், அருகம் வேர், சிறுமுட்டி, கார்போக வித்து வகைக்கு அரைப் பலம் வாங்கி வெயிலில் உலர்த்தி சூரணம் செய்து அந்த எடைக்கு கற்கண்டு கூட்டி பசுவின் வெண்ணெயில் மண்டலங் கொள்ள வெள்ளை நீரெரிப்பு தீரும். பத்தியம் காயமாகா.

வயிற்றில் செத்த பிள்ளை விழ :-

அரசம் பட்டை, ஏலம் விராகனிடை, காடியிலரைத்து கொடுக்க விழும். லவங்கம் விராகனிடை, செவ்விள நீரில் கரைத்து கொடுக்க விழும்.

(வேறு) பிள்ளை விழ மருந்து :- பன்றிப் பல்லை அரைத்து எண்ணெயில் கொடுக்க விழும்.

சங்கன் குப்பிச் சார் மூலம் தழை. 3, காடியிலரைத்து குடிக்க விழும்.

தயிர் விழுது குச்சலின் தழை- கை முறை வெள்ளைக்கு :- ராத்திரியில் வெள்ளை சீரகம், கருஞ்சீரகம்.

மேக சூலை வயற்று வலிக்கு :- மல்லிக் கொழுந்து வெண்ணெய் புராசக் கீரை இதுகளை கொடுக்கவும்.

கைமுறை :- வயிற்றில் செத்த பிள்ளை விழ மருந்து :- திப்பிலி காடி வார்த்து அரைத்து மேல் வயிற்றிலும் கீழ் வயிற்றிலும் தடவ பிள்ளை விழும்.

கபால சன்னிக்கு திரி :-

சுக்கு, மிளகு, திப்பிலி, மஞ்சள், மரமஞ்சள், கஸ்தூரி மஞ்சள், சதகுப்பி, சூடன் இதுகள் வகைக்கு பலம். வ, நீர் சுண்டி ரசம் விட்டு அரைத்து மெல்லிய சீலையிலாட்டி நிழலிலுலர்த்தி பத்திரப் படுத்தி நாசியில் புகை பிடிக்க தலை நோவு கண் குத்தல் சல பீனிச முக வாதம் கபால சூலை கபால சன்னி தீரும் கை கண்டது.

இந்திரியக் கட்ட :-

பச்சை நிலப்பனைக் கிழங்கு, சீனம், தண்ணீர் விட்டான் கிழங்கு ஆனை நெருஞ்சிக் காய் வகைக்கு தோலா. க இவைகளை மை போலரைத்து கால் படி பசும் பாலில் கலக்கி காய்ச்சி

இரவில் புசித்தான பிறகு ~~சாதம்~~ சாப்பிடவும். ~~இதை~~ இப்படி மூன்று நாள் கொள்ள நீத்திருந்த இந்திரியம் கட்டும். ~~பிரம ரகசியம்~~.

<u>ரத்த வயர் கொட்டர் சீதபேதிக்கு</u>:-

மாம்பட்டை, மாங்கொழுந்து, நாவல்பட்டை, நாவல் கொழுந்து, ஆலரிம் விழுது இடித்து கசாயம் செய்து 6 வேளை கொள்ள தீரும்.

<u>ரத்த பிரமித்து</u>:- வெள்ளை பூலாக் கொழுந்து ஒரு பிடி, கொண்டு வந்து பசுவின் பால் விட்டரைத்து வெல்லம் போட்டு குடிக்கவும். கை கண்டது. நெய் ஆகும். கரும்பு புளிப்பு தவிர்க்கவும்.

<u>சலக் கழிச்சலுக்கு</u>:-

நிலப்பனைக் கிழங்கு இரண்டு, விளாங்காய் அளவு அரைத்து வெள்ளாட்டுப் பால் ஒரு வள்ளம் கருவித்து காய வைத்து இறக்கிக் கொண்டு மேற்கண்ட கிழங்கு பாலில் கரைத்து ஆழதிட்டு தயிரான பிறகு கடைந்த வெண்ணை எடுத்து .எ நாள் கொள்ளவும். பத்தியம் கறி கூட்டவும். குணமாகும். கை கண்டது.

<u>நொருக்கு புண்ணுக்கு பிளாஸ்திரி</u>:-

கெந்தகம், பூரம், மிருதார் சிங்கி, அத்தம், குங்கிலியம், தேங்காய் எண்ணெய், நல்ல சலம், மயில் துத்தம், பால் துத்தம், இவைகள் சேர்த்து அடுப்பிலேற்றி காய்ச்சி போடவும்.

<u>ரணமாற பிளாஸ்திரி</u>:-

வெள்ளைக் குங்கிலியம் சமன் உருக்கி தேங்காய் ~~எ~~ கலந்து உருக்கி ஜலத்தில் வார்த்து துணியில் தடவி புண்மேல் போடவும் ஆறும்.

~~ஆண் கட்டு பெண் சேர மருந்து~~:-

~~செங்கருங் குன்றி விரையும் சிதள் உள்ளி வேரும் அந்தி காரம் கோஷ்டம் அனி முலைப் பாலில் அரைத்து சங்கருள் தலையில் பூசி தய்யலாருமையாளவர் இது கலி அரிய வேண்டியது. இந்த மருந்தை கட்டி தண்டில் தடவி புணர பெண் வசமாவாள். பார்வதி சாட்சி.~~

D1

<u>பிள்ளை பெறமாட்டாதார்க்கு மருந்து</u>:- not required

குதிரை ஆண் குட்டி போட்டால் அந்த குட்டியுட லத்தி முகர்ந்து பார்க்கு முன்னமே அந்த லத்தியை எடுத்து வேந்து விளக்கெண்ணெயில் பிழிந்து அந்த எண்ணையை உள்ளுக்கும் கொடுத்து உடம்புக்கு தலையிடவும். செத்த பிள்ளை முதலானதும் விழுந்து போகும். இது கை கண்டது.

<u>நீர் சுருக்குக்கு</u>:-

கசகசா பலம்.க, வால் மிளகு பலம்.வ, சீனி பலம்.உ, பச்சின் பலம் தேத்தான் கொட்டை.வ, இதுகளை சூரணித்து நெய்யில் கிளறிக் கொள்ள நீர் எரிச்சல் வெள்ளை நீர் சுருக்கு நீர் செரிப்பு இவைகள் போகும். [மண்டலம்.வ, குன்றியம் யெருமல் ஆனை வேர், ~~எலுமிச்சம்~~ பழம் வேர், வெற்றிலை வேர், தகரை வேர் இந்த நாலு வேரும் ஞாயற்று கிழமை மருள் பனி கொடுத்து சுக்கிர வார நாள் எடுத்து பச்ச வர்ண சத்திலடைத்து கட்டிக் கொண்டால் பில்லி சூனியம் அண்டாது. இது கை கண்டது.] Not useful

<u>வெள்ளைக்கு</u>:-

மாட்டு வெண்ணை, யெலரி, இதுகளை சுடு தண்ணீரில் போட்டுக் கொடுக்கவும். நன்னாரி வேர், எலுமிச்சம் பழம்.உ, நெரு நீர் வெண்ணை தேத்தான் கொட்டை இதுகளை நாள் செய்து கொடுக்கவும். கரிவேலங் காயை இடித்து மாட்டுத் தயிரில் ரசத்தை விட்டு மூன்று நாள் கொடுக்க தீரும். பத்தியம் அன்னம் தயிர் மற்றது ஆகாது.

not useful

ஊக்கிற மருந்து:- Not required

எறு கண் புத்து மண்ணும் குசவன் கை வளிச்ச மண்ணும் அவள் சிறுநீர் விட்ட மண்ணும் இந்த மூன்று வகை மண்ணும் பாவை பண்ணி அவள் தலை மயிர் தம்பளமும் வாயிலும் தலையிலும் வைத்து அவள் பேர் சொல்லி அடுப்பு முன்னே புதைக்கவும். பேரான பெண் வருவாள். கை கண்ட முறை.

ஒரு விரை வாதத் மெழுகு:-

நீங்கு நன் மிளகு வகையோ, ஒங்கு பூரமு மென்ச களஞ்சிடை வாங்கு லிங்கம் வகையது காலதாய் ஆங்கு தேன் விட்டரை மெழுகாகுமே ஆடுந் தா நலங்காய் போலட்டிடு தேடு மைந்து சின மப்பு புளி புகை தள்ளிடே

குன்னியத்துக்கு மருந்து:- Not useful

காரீயமும் முக்கல்ஞ்சி, இரசமு முக்களஞ்சி, அரசம் பால், ஆலம் பால், வேலிப் பருத்திப் பால், பேயத்திப் பால், ஊமத்தன் சாறு இந்த சார் எல்லாம் கூட்டி காரீயம் ரசமும் ஏழு நாள் ஊறப் போட்டு எடுத்து கரண்டியில் போட்டு உருக்கி கட்டி வத்தி நூலை செய்து இந்த மணி கட்டி கொண்டால் குன்னியம் அண்டாது. குரு சகாயம்.

கபால வலிக்கு தயிலம்:-

பச்சை மஞ்சள் சாறு; ஆதன்டை சாறு, பரித்த நொச்சியிலை சாறு, பகரு வோங் கேசு இச்சையா மனக்கென்னெய் வகையே நாழி இதனுடனே கற்க வகை வரத்தை சதுப்பை வைத்த வகை பல மொன்றே யரைத்துக் காய்ச்சி வழுவாத பதம் வடித்துத் தலையில் முழ்க உச்சிதமாய் கபால வலி ஒருத் தலை நோயெல்லாம் ஓடிப் போமென்றே யுரைத்தார் முனிவர் தாமே.

இருமலுக்கு கசாயம்:-

இண்டி லை, தா தளை சங்கு, திப்பிலி கண்டரி, சுக்குடன் கலந்த வெந்நீர் உண்ட பின்னொரு நாழிகு மற்றிடில் கெண்டமுந் தருவன் யானே

கபாலத்து லைக்கு தயிலம்:-

கருஞ் செம்பைப் பூ, ஆதன்டை வேர்ப் பட்டை, கொம்பரக்கு, மஞ்சள் வெள்ளைப் பூண்டு, மிளகு, நல்ல என்ணை படி. இதுகளை வகைக்கு தட்டிடை பொடி பண்ணி எண்ணெயில் கலந்து பதத்தோடே காய்ச்சி தலையில் தேய்த்து வெந்நீர் வார்க்க பினி மண்டை குலை தலைவலி சிரசு குடு இதுகள் தீரும். சே

சோகை, காமாலை, பாண்டு, வீக்கம், சோபைக்கு:-

கையான் செந்தொட்டி வேர், நீர்முள்ளி விழுதி வேர், கோவைத் தண்டு வேர், பூவரசம் பட்டை, திறபனை வேர், சம்பு நாவல் தளிர், நெருஞ்சி வேர், சிறு சீரை வேர், நிலாவாரை உஞ்சல் பட்டை வகைக்கு பலம்.க,! கடுக்காய் ரோகிணி கரும் சீரகம் காட்டுச் சீரகம் திப்பிலி இதுகளிடித்து பந்து செய்து ஒரு பங்கெடுத்து படி நீர் விட்டு அ.க. காய்ச்சி வடி கட்டி பிரிந்து நாள் கொடுக்கவும். உப்பாகாது. சோகை காமாலை வீக்கம் நிற்க சோகை பாண்டு மகோதரம் பீலிகை பொருமல் இளைப்பு தீரும். எ. நாள் நீர் வார்த்து ஜ நாள் புளி சேர்க்கவும்.

மேகத்துக்கு என்ணெய்:-

கடுக்காய், இஞ்சி, சுக்கு, சீரகம், நீர் வேப்பு 1 பட்டை பரங்கி சக்கை மிளகு, வெந்தியமும், நெல்லி முள்ளி கோஷ்டம், அதிமதுரம் இது பலம்.க, சித்தரன்ட என்ணை படி.க, கள்ளியின் பால் படி.க, கத்தாழை சார் படி.க, சேல்வல்லி சார் படி.க, செவ்விள நீர் படி.க, வறலை மத 3/4 இதுகளை அரைத்துக் கொண்டு என்ணெயில் குழப்பி கொண்டு பாலும் சாறும் சட்டியில் போட்டு அடுப்பேற்றி சிவந்தின பின் மெழுகு பதமான பிறகு இறுத்திக் கொண்டு உச்சிக் கரண்டி வதம் காலையில் கொள்ளவும். இப்படி ஒரு மண்டலம் கொள்ள

மேகம் இருபத்தி ஒன்றும் பெரும்பாடு சூலை பட்ச வாதம் இதுகள் பேரம் பத்தியம், புளி புகை போகம் கடுகு நல்ல எண்ணை பூசனிக்காய் யகத்தி தள்ளும்.

குளிர்ச்சி எண்ணெய் :-

சித்தரன்ட எண்ணை படி.க, வெள்ளருகு படி.க, குமரிச் சார் படி.க, ஆவின் பால் படி.க, வெல்லாரை படி.க, காலிச்சார் படி.க, அத்திப் பால் படி.க, பூவரசன் பட்டை சார் படி.க, முள்ளங்கிச் சார் படி.க, கோஷ்டம் மதுரம், திரிகடுகு, சடாமாஞ்சி, சீரகம், வெந்தியம், திப்பிலி, பரங்கிச் சக்கை, ரோகனி, வால் மிளகு, கடுக்காய், பிஞ்சு, சிறுதேக்கு, தினி சுக்கு, ஒரு பலம், வாலை பலம்.க, கல்வத்தில் போட்டு இளநீர் வார்த்து மை போல் செய்து மேற்கண்ட பாலும் சாறும் எண்ணெயும் சேர்த்து எல்லாம் ஒன்றாய்க் கலந்து சட்டியில் இருத்தி தீ எரித்து மெழுகு பதமாய்க் காய்ச்சி வேறே ஒரு சட்டியில் இறுத்துக் கொண்டு நாள் ஒன்றுக்கு ஓ கரண்டி வீதம் காலையில் உள்ளுக்கு கொள்ள கடும் பத்தியம் உப்பு முதல் பதார்த்தம் தள்ள வரத் தீ துவரையாகும்.

நேத்திர வாய்வுக்கு மருந்து :-

படிகாரம் இரும்பு கரண்டியில் போட்டு பசுவின் வெண்ணையும் போட்டு நன்றாய்க் காய்ச்சி காஞ்சதின் பிறகு படிகாரத்தை கட்டி நெரிக்சி வெந்த பிறகு கலந்த பிறத்தியில் வெளிச்சி காசி செம்பாலே நன்கு அரைத்து வழித்து சிமிழில் வைத்துக் கொண்டு கண்ணில் போடவும். எட்டு நாள் இரண்டு நேரமும் போடவும். கண் நேத்திர வாய்வு போம். கை கண்டது.

தலை முழுக :-

கார் எள்ளு கற்றாழைச் சாறு படி வாங்கி இளநீர் தண்ணீர் படி.க, நெய் சிட்டி படி.க, ஆவாரைச் சார் படி.க, கரிசிச் சார் படி.க, ஆவின் பால் படி.க, சாம்பிராணி பலம்.உ, பச்சலி நிச்சலி கிழங்கு மிளகு பலம்.க, கல்வத்தில் போட்டு மை போலாட்டி பாலும் சாறும் எண்ணெயிலே குழப்பிக் கொண்டு பாண்டத்தில் போட்டு அடுப்பேத்தி தீ மூட்டி மெழுகு பதமான பின்பு வேறே ஒரு பாண்டத்தில் இறுத்துக் கொண்டு எட்டு நாள் இரண்டு வட்டம் தலைக்கு இதை முழுவாய் நீ பனிரெண்டு [illegible] தலை முழுகி வந்தால் தலையும்.

வியாதியின் பேர். பத்தியம் வெகு கருக்காய் போகும். மேகம் மயக்கமாயிருக்கிற பித்தம் போகும். தலைக்குத்தல் கண் எரிச்சல், ரணம், சொறி கரப்பான் எரிவு யிருக்காது வியாதி போகும். இந்த தயிலம் முழுகுவோர்க்கு தேகம் பொன் வர்ணமாகும். அதிக பலமுண்டாகும். நேத்திரத்தின் உஷ்ணம் போகும். செவி நோய் இதுகள் போம்.

இழப்பு இருமலுக்கு :-

இஞ்சி சார் ஈர வெங்காயச் சார் எலுமிச்சம் பழச் சார் இவை மூன்றும் சமனாக சேர்த்து மூன்று நாள் கொடுக்க தீரும். இச்சா பத்தியம்.

மேகத்துக்கு எண்ணெய் :-

எண்ணை, மிளகறணை, வெள்ளை சாறணை வேர், முந்திரி வேர், முருங்கை வேர், குமரி வள்ளி சிந்தி சலம், கிருட்டி கரிசாலை, பொன்னாங்கண்ணி அமுக்கிறா சங்கங் குப்பி நீர் புலா விழுதி நிலப்பனை வேர் அழிஞ்சிப் பட்டை சிறுவிளா வெள்ளறுகு வள்ளாரைச் ஆவாரை மொட்டு கொத்தான் அகத்தி வகைக்கு பலம்.உ ஆவாரை மூலம் பலம் பத்து இவைகளை ஒன்றாய் சேர்த்து இடித்து ஒரு செம்பு சலம் வார்த்து சீரகம் பலம் எட்டு வெந்தியம் பலம் எட்டு இதுகளை கரைத்துக் கொண்டு பதினாறு படி சலம் வார்த்து அடுப்பிலேத்தி ஏற வைத்து கஷாயம் இறவு கொண்டு சித்தன்டை எண்ணை படி.க எருக்கிலி படி சார் வாறு காறாவின் படி இரண்டு கல்நார் எட்டு.

கல்நார் வஸ்திர காயம் செய்து செய்ததிலே போட்டு ராயபுரி சர்க்கரை

எட்டு போட்டு காய்ச்சி பாலோடு வற்றிய பின் எண்ணெ மெழுகு பதமாக கிண்டின

ஆறி சாடி மூடி புடம் வைய்யே. நாள் ஒன்றுக்கு ஒரு கரண்டி வீதம் தினம் தோறும் கொண்ண ஓடுகிற நோய் நீ உற்றுக் கே

மேகள் இரண்டு பத்து, கிரந்தி அரையாப்பு, ஷ்டம், அஸ்திர சுரம், அஸ்தி வெட்டை, சிரங்கு மேகம், பித்த வாய்வுவோடு, அண்டவாதம், பித்த வாய்வு, உஷ்ண வாய்வு, மெய்யெரிவு காலயெரிவு காந்தல் வாய்வோடு, கெற்ப நோய் மேக மாம், மலடிக்கு பிள்ளை யுண்டாம். என்னைக்கு பத்தியம் ~~இல்லை~~ இல்லை பெரியோருக்கும் சிறியோருக்கும் ரோகளை அறிந்து செய்யே.

பூபதி குளிகை:-

நாபி, சுக்கு, சூதம், திப்பிலி, தாரம், மிளகு, கெந்தி, காயம், இவைகள் சமயிடையாய் சேர்த்து சித்திர மூலம் கசாயத்தால் ஏழு நாளரைத்து மிளகு பிரமாணம் மாத்திரை செய்து தேன் அல்லது இஞ்சி சாத்திலிட சன்னி தோஷம், வாதம், வாய்வு குன்மம், நாவரட்டி க்ஷய காசம், மேகம் இவைகள் தீரும்.

கை முறை: கோழை இருமலுக்கு:-

கோழை இருமலுடன் கபம் கட்டியிருந்தால் .ரு பலம் தேனைக் காய்ச்சி சுடுகையில் தானே மிளகு தோலா.க பொரிந்த வெங்காரம் தோலா.க அதுகளை கலக்கி வேளைக்கு.க தோலா வீதம் கொடுக்க தீரும். ஓ

ஒரு தலை வலிக்கு தயிலம்:-

மலைவேம்பு, செவ்வலரி, ஆதண்டை, கருநொச்சி, இவைகளின் சாறு வகைக்கு நாழி, அரைக்கால் நல்ல எண்ணை நாழி, அரை ஒன்றாய் கலந்து அதில் கருஞ்சீரகம் வால் மிளகு ஒரு தலைப் பூண்டு வகைக்கு பலம்.க, அரைத்துப் போட்டு காய்ச்சி இறக்கு மு முழுங்கி வரத் தீரும்.

2-வது மருந்து:-

சபந்த தாது விஷம் பிரவேசித்து நெடு நாளாகியும் நீங்காமல் பிரலாபம் பிரமை சுவாசம் என்னும் இக் குணங்களை யுண்டாக்கிய சுரமும் தொண்டை வீக்கம், இளைத்தல் மந்தாக்கினி வாய் குளறல் மார்பு நோவு கண் சிவத்தல் இவைகளை யுண்டாக்கும்.

நிவர்த்தி:- உலர்ந்த இஞ்சி, கடுக்காய், நிலவேம்பு, வேப்பம் பட்டை, சீந்தில், பேய்ப்புடல் வகைக்கு பலம்.உ குடிநீர் செய்து கொடுக்க நீங்கும்.

2-வது மருந்து:- ஆடாதோடை ஈர்க்கு வேம்பு, சீந்தில் தண்டு பேய்புடல், பேய் பீர்க்கம் வேர், வெப்பாலை அரிசி, வகைக்கு பலம்.வ, முன்போல் கசாயம் செய்து கொடுக்க நீங்கும்.

சன்னி வாதத்துக்கு வொத்தடம்:- கொப்பரை தேங்காய்.ரு, வெள்ளைப் பூண்டு பலம்.உ, வேப்ப முத்து படி.அரை இவைகளை ஒன்று இடித்து பொட்டணங் கட்டி வேப்ப எண்ணையை கொதிக்க வைத்து அதில் அந்தப் பொட்டணத்தை வைத்து வெதுப்பத்துடன் உடலாதி யந்த மும் ஒத்தடம் செய்யத் தீரும். காளம் இருப்பை புண்ணுக்கு மஞ்சள் எருக்கம் பூ இவைகளை ஓர் நிறையாய் எடுத்து துணியில் முடிந்த தட்டுடன் ஒத்தடம் செய்ய தீரும்.

சன்னிக்கு புகை:-

அரிதாரம், குங்கிலியம், சாதிலிங்கம், நவச்சாரம், மிளகு, கருஞ்சீரகம், கார் கோலரிசி, சாம்பிராணி வகைக்கு விராகனிடை.க இவைகளை குப்பை மேனி சாற்றிலரைத்து துணியில் ஊற்றி திரித்து வேப்பயெண்ணை யிற்று வைத்து தீயிற் கொளுத்தி நாசியிற் புகை பிடிக்க தீரும்.

பொன்னாங்கன்னி தயிலம்:-

ஆம்பா பொன்னாங்காணித் தைலங் கேளு அப்பனே காணிச் சாறு படி இரண்டு

நாமப்பா கரிசாலைச் சாறு படி ஒன்று நலமான நெல்லிக்காய்ச் சாறு படி ஒன்று
தாமப்பா யெள்ளு னெய் படி யிரண்டு தப்பாம லாவின் பால் படி இரண்டு
வேமப்பா மதுரமது பலமிரண்டு விருதான முறை பாலாலரைத்துப் போடே.

போடப்பா மெழுகு பதந் தனில் வடித்து புகழாக மூழ்கி வரத் தீரும் நோய்கள்
நீட்டப்பா நேத்திர நோய் தொண்ணூற்றும் நிலமை கெட்ட காசமெல்லாம் நீங்கிப் போகும்
வாட்டப்பா பித்த மெல்லாம் வாங்கிப் போகும் வலமாகு நேத்திரங் களொளியே மீ...
நாட்டப்பா வுஷ்ண நோயெல்லாந் தீரும் நலமான கீழ்க்காய் நெல்லித் தயிலங் கேளே

<u>பொன்னாங்காணி கிருதம்</u> :-

கொள்ளவே கிருதமொன்று சொல்லக் கேளு குறிப்பான காணிச் சாறு படி நாலென்று
நல்லவே யோர் கையான் சாறு படியொன்று நலமான பழச் சாறு படியரை நாளே விட்டு
வில்லவே யாவின் நெய் படி நாலென்று விருதான வாவின் பால் படி நாலென்று
தெள்ளவே மதுரமது பலந்தாரெண்டு தெளிவான வாவின் பால் விட்டிட்டாட்டே

ஆட்டியே நெய்க்குள்ளே கரைத்து விட்டு அடுப்பேற்றி மெழுகு பதமானவாறே
நீட்டியே சாதிக்காய் சாதிப்பத்திரி நிலவாக கோரோசனையுங் கற்கண்டப்பா
நாட்டியே கழஞ்சி நிறை பொடித்துப் போட்டு நலமான சிட்டி வைத்து குறண்டி வீதம்
மூட்டியே யிரு நேரம் கொண்டாயானால் முக்கியமாய்த் தீருமடா மூலச் சூடே

சாப்புக் கடையில் இருக்கும் திராவகம் காடி தண்ணீரில் தகடை மூன்று தபா காச்சி காய்ச்சி தோய்க்கவும். பின் நல்லெண்ணெயில் மூன்று தபாவும் பசு கோமியத்தில் மூன்று தபாவும் கொள்ளு தண்ணீரில் மூன்று தபாவும் தோய்க்க சுத்தியாகும். 5 பலம் சிறுளத்துக்கு நிகர் குதமும் அதினிடை கெந்தியும் காடியிலரைத்து தகட்டுக்கு தடவி காய வைத்து அகலில் வைத்து கெஜபுடம் போடவும் பற்பமாம். பின் எடுத்து எலுமிச்சம் பழம் இவை சாறு விட்டு மூன்று நாள் அரைத்து காய வைத்து கெஜபுடம் போட பற்பமாம். பின் எடுத்து தயிரில் கொஞ்சம் போட்டு வைக்க பச்சை வந்தால் பரிசுத்தம் ஆகவில்லை என்றும் வராவிட்டால் நன்றாகவும் பாவித்து உபயோகித்துக் கொள்ளவும். அந்த பற்பத்தில் குதவம் இருக்கிறதும் இல்லாததும் அறிக. தேன் நெய் வெங்காயம் சமம் போட்டு வைத்து (சுமதய) ஊறிய பின் காரியில் வைத்து உருக்கி விடமுன் பழயபடி தாம்பிரமாகும். (மேல் வேறு ஒரு நூல் தொடங்குகிறது)

****

தாது விர்த்தி போர்த்தினி. அக்கீம் பாவா சாயவு அவர்கள் குமாரர் முகமது அப்துல்லா சாயவு அவர்களினால் இயற்றப்பட்டது யூனானி வைத்தியம்: அடுத்த பாகம்:

இலகுவாய்ஜீரணிக்கத் தக்கதும் ரத்த விருத்தியை உண்டாக்கும்படியானதுமான ஆகார வகைகள்: <u>பார்லி அரிசி ஜலம்: செய்முறை</u> :-

கல் முதலியவைகளைப் போக்கி சுத்தி செய்ததும் புதியதுமான பார்லி அரிசி பலம்.க, நல்ல ஜலம் படி.வ, இட்டுக் கொஞ்ச நேரம் காய்ச்சி தண்ணீர் சிவந்தவுடன் இறக்கி அந்த ஜலத்தை இறுத்து விட்டு வேறு ஜலம் படி.வ, விட்டுக் காய்ச்சி அந்த ஜலமும் சிவந்தவுடன் இறக்கி முன் போலவே அந்த ஜலத்தை வடிகட்டி மறு ஜலம் வார்த்து காய்ச்ச வேண்டியது. இப்படி ந தடவைகள் செய்வதினால் ஜலம் சிகப்பாகாதிருக்கும் பின்பு நன்றாய் அரிசி மலரும்படியாக வேக வைத்து இறக்கி ஆற விட்டு கொஞ்சம் சர்க்கரை சேர்த்து அல்லது ஏதேனும் ஒர்லித உஷ்ணபத்து சேர்த்து சாப்பிட வேண்டியது.
உபயோகம்:- தேகத்துக்கு குளிர்ச்சியை உண்டாக்கும். நரம்பு முதலானவைகளிலுள்ள மாசுகளை மாசுகள் மலச் சிக்கல் மல வரட்சி முதலியவைகளை நீக்கும். இரப்பையிலுள்ள மாசுகளை நீக்கி சுத்தி செய்யும்: எந்த தேகிக்கும் பொருந்தும். வாய்க்கு ருசியாயிருக்கும். சீதள

தேகிகள் ருல்கந்து சேர்த்து சாப்பிட வேண்டியது.

2-வது வேறு விதம் தேகத்துக்கு அதிக பல முண்டாக்க வேண்டியது இருந்தால் முன் முறைப்படியே செய்து கடைசியில் வார்க்கிற சலத்திற்கு பதிலாய் பின் சொல்கிற இறைச்சி சத்து அல்லது மாமிசத்தின் நீர் சேர்த்து காய்ச்சிக் கொள்ள வேண்டியது.

(குறிப்பு) மலத்தை மலத்தைக் கட்ட வேண்டிய போது வந்த அரிசியை வறுத்துக் கொள்ள வேண்டியது. அல்லது முழுவாகா வேக வைக்கிற சலத்தில் .ஏ பலம் போல்தக் காயை சீலையில் பொட்டலமாய்க் கட்டிப் போட்டு வேக வைக்க வேண்டியது.

சத்து ஆட்டிறைச்சி:-

ஆட்டிறைச்சி பலம். சன்னமாய்க் கொந்தி அரைப்படி குளிர்ந்த சலத்திலிட்டு அதில் .ங வெண்டைக்காய்களை சிறு துண்டுகளாய் அரிந்து போட்டு க மணி நேரம் அசையாது வைத்துப் பின்பு வாயைக் கெட்டியாய் மூடி மிகவும் சிறு தீயாக எரிக்க. அதில் ஓர்வித சப்பு முண்டாகும். அதன் பின்பு வ மணி நேரம் அதிக தீயிடாது சமமாகிய தீயிட்டுக் காய்ச்சி வடி கட்டி ருசி கொடுக்க உப்புமிட்டுச் சாப்பிடவும். உபயோகம் எந்தக் காரணத் தினாலேனும் உண்டான துர்பலத்தை நீக்கி நல்ல பலம் கொடுக்கும். தேகத்திற்கு போஷணைப் பைக் கொடுத்து ருசுண்டாக்கும்.

இங்கிலீஷ் முறை: வேறு வகை:-

கொழுப்பு முதலியவைகளை சுத்தி செய்த இறச்சி பலம்.யஉ சிறு துண்டுகளாகச் செய்து ஓர் சிறு மண் பாத்திரத்தில் அல்லது சட்டியிலிட்டு அந்தப் பாத்திரத்தின் வாயை மூடிக் கோதுமை மாவைக் கெட்டியாய்க் குழைத்து சீலையில் தடவி வாய்க்குச் சீலை செய்து ஒரு முனியில் நன்று இறுக்கிக் கட்டி விட வேண்டியது. பின்பு இந்த பாத்திரம் கொள்ளும்படி யான பெரிய வேறு பாத்திரத்தில் முக்கால் பங்கு நீர் வார்த்துக் கொதிக்கையில் சீலையில் முடிந்திருக்கிறதை இதில் விட்டு விட வேண்டியது. 2 மணி நேரம் நன்றாய்க் கொதித்த பின்பு எடுத்து அம் முட்டையை அவிழ்த்து அப்பாத்திரத்தை திறந்து பார்க்க உள்ளே சத்து இறங்கி யிருக்கும். அந்தச் சத்தை சாப்பிட வேண்டியது. உபயோகம் தேகத்துக்கு பலத்தைக் கொடுக்கும். ரத்த விருத்தியை உண்டாக்கும்.

ஆட்டிறைச்சிக் கஞ்சி:-

கொழுப்பு முதலியவைகளை சுத்தி செய்த ஆட்டிறைச்சி பலம். நன்றாய்க் கொந்தி மெல்லிய சீலைத் துண்டில் வைத்து அதன் நடுவில் தோல் நீக்கின இஞ்சி துலா.க நறுக்கி வைத்து பச்சைக் கடலைப் பருப்பு துலா. பச்சைக் கொத்தமல்லி தழை துலாவ-ம் கூட வைத்து முட்டையாக வைத்துக் கொண்டு ஒரு பானையில் அரைப்படி சலம் வார்த்து அதில் இந்த முட்டையை அமுத்திப் பிரியலாகாது. பின்பு அந்த சலத்தில் கோதுமை நொய் ஒரு பலமிட்டு காய்ச்சி நன்றாய் வெந்த பின்பு இறக்கி வேறு பாத்திரத்தில் ஒரு துலா நெய் வார்த்து அதில் ரு லவங்கமும் துலாயிடை லவங்கப் பட்டையும் போட்டு வருக்கையில் சிவந்து வரும். போது முன் தயார் செய்ததை விட்டு இறக்கி உ ஏலக்காயை கொஞ்சம் நறுக்கிப் போட்டு சற்று ஆறின பின் சாப்பிடவும். உபயோகம் இரைப்பைக்கு பலத்தை உண்டாக்கி ஜீரண சக்தியை அதிகப்படுத்தி ரத்த விருத்தியாக்கி பலத்தைக் கொடுக்கும்.

மாமிசக் கிழங்கு நீர்:-

கொழுப்பு முதலியவைகளை சுத்தி செய்த இறச்சி பலம்.உய-க்கு சுத்த சலம் படி.க, விட்டு வாலையிலிட்டு திராவகம் இறக்கிக் கொள்ள வேண்டியது. இது சாதாரணமானது இத்துடன் அனேக சரக்குகள் சேர்த்து இறக்குவது முண்டு. உபயோகம் தேக பலத்தை உண்டாக்கும். அஜீரணப் படுத்தாது. இதைச் சார்ந்த மற்றப் பானங்களும் பின்னர் எழுதப்படும்.

பசுதம் பருப்பு பாயசம். தோல் நீக்கினதும் கசப்புள்ளவை நீக்கினதுமான வாதுமைப் பருப்பு பலம்பலம். வாசனையுள்ள பச்சை அரிசி பலம்.உ கற்கண்டு பலம்.உ அரிசி அரைத்து மெல்லிய சீலையில் முடிந்து முக்கால் படி சலத்தில் கையினால் நன்றாய் பிசைந்து கரைத்துக் காய்ச்ச வேண்டியது. அப்பொழுது அகப்பையினால் துழாவிக் கொண்டிருக்க வேண்டியது.

Pages 10 & 11 not useful

மூன்று கொதி வந்த பின்பு கற்கண்டை வேறே பாகாகச் செய்து இதில் சேர்த்துக் காய்ச்சிப் பாகு பதத்தில் இறக்கித் தேவையான கஸ்தூரி பன்னீர் முதலியது சேர்த்து சிறு சூடாய் இருக்கும் போதே சாப்பிட வேண்டியது. உபயோகம் சுக்கில தாது விருத்தி, தேக புஷ்டி, ஆகியவை உண்டாகும். இருமல் தீரும். தேகத்தின் சூடு சாந்தமாகும். ரத்த விருத்தியுண்டாகி தேக வெளுப்பு மாறும்.

கோதுமை பாயசம்:-

தோலிக் கோதுமை சுத்தி உமி போக்கியது ஒரு ரூபாயிடையை ௩ நாள் சலத்தில் ஊற வைத்துக் கையில் நன்றாய் பிசைந்து தேய்த்து கால் படி பால் எடுத்து வடி கட்டிக் கொள்ளவும். பசும் பால் மூன்று பலம், தோல் நீக்கி சுத்தி செய்த பாதம் பருப்பு துலா.௧ அரைத்து துணியில் முடிந்து பிசைந்தெடுத்து வடிகட்டின பால் படி.௮, ஆகிய இம் மூன்றையும் ஒன்றாய்ச் சேர்த்து காய்ச்சி மூன்று கொதி வந்தவுடன் கற்கண்டு பலம்.௨ய வேறே பாகாகச் செய்து இதுடன் சேர்த்துக் காய்ச்சி பாகு பதத்தில் இறக்கி கஸ்தூரி தேவையானது சேர்த்து உபயோகிக்க வேண்டியது. உபயோகம் மார்பிற்கு பலத்தைக் கொடுக்கும். ரத்த விருத்தியுண்டாக்கும். தேகம் தழைக்கும். விந்து மும்.

பால் பாயசம்:-

பசும் பால் படி.., நிவர்ஸ்தா துலா.௩, தோல் நீக்கின பாதாம் பருப்பு துலா.௨, கற்கண்டு பலம்.௨ய; பாதம் பருப்பை முன்போல அரைத்துப் பிழிந்து வடிகட்டி ௮ படி பால் எடுத்து பசும் பாலுடன் சேர்த்துக் கொள்ளவும். நிவார்தாவைப் பொடி செய்து தக்க நெய்யில் வறுத்து மேற்படி பாலிலிட்டு அகப்பையினால் துழவிக் கொண்டே காய்ச்சி மூன்று கொதி வந்தவுடன் கற்கண்டு பாகையும் சேர்த்து பாகு பதத்தில் இறக்கிக் கொஞ்சம் கஸ்தூரி சேர்த்துக் கொண்டு சாப்பிடவும். கோதுமையை.௩ நாள் ஊற வைத்து பிசைந்து பால் எடுத்து உலர்த்தியதற்கு நிவாஸ்தாவென்று பேர்.

காஜர் பாயசம்:-

காஜர் கிழங்கின் மேல் தோல் கரடு முதலியன சுத்தி செய்தது பலம்.௩ அரிசியைப் போல் சிறு துண்டுகளாய்ச் செய்து தண்ணீர் விட்டு வேக வைத்து தண்ணீரை இறுத்து விட்டு வைத்துக் கொள்ள வேண்டியது.

வாய் வலி வந்தால்:-

கருவேலம் பட்டை, கொட்டைப் பாக்கு, காசுக் கட்டி, படிகாரம் இது வெல்லாம் காய வைத்து வாய் கொப்பளிக்கவும். வாய் பிடிக்கும். சாந்தி. சகல வியாதி தீரும்.

வாய்வு பிடிக்கு மருந்து:- பெருங்காயம் விராகனிடை.௧, ஓமம் விராகனிடை.௧, மோடி விராகனிடை.௧, ரசகற்பூரம் விராகனிடை.௧, லவங்கம் விராகனிடை.௧, மிளகு விராகனிடை.௧, இது வெல்லாம் கூட்டி வேலம் பட்டை சாறு விட்டு அரைத்து சுண்டைகாயளவு உருண்டை பண்ணி மூன்று நாளாகிலும் ௭ நாளாகிலும் அந்தி சந்தி சாப்பிடவும். பத்தியம் உப்பு வசத்து போடவும். புளி தள்ளவும். நெய் மாத்திரம் சாப்பிடவும்.

சுரம் சன்னிக்கு பயிரவ மாத்திரை:-

சாதி இலவங்கம், வெங்காரம், வசநாவி, (வகுவுக்கு) விராகனிடை இது வெல்லாம் எலுமிச்சம் பழம் சார் விட்டு அரைத்து கடுகு போல மாத்திரை பண்ணி தேனிலே கலந்து கொடுக்கவும். இஞ்சி சாற்றிலே கொடுக்கவும். பீனிசத்துக்கு

பீனிசத்துக்கு நசியம்:- குங்குமப்பூ, கோரோசனை, முந்திரிப் பருப்பு இது வெல்லாம் நெய்யிலே போட்டு காய்ச்சி மூக்கிலே நசியம் பண்ணவும்.

தலைவலிக்கு நசியம்:- சுண்டைக்காய் பட்டை பொடி பண்ணி நசியம் பண்ணவும்.

ரத்த கடுப்புக்கு:- நெல்லிக்காய் விராகனிடை.௨, புளியங் கொட்டை தோல் விராகனிடை. கடுக்காய் பலம்.௨ இது வெல்லாம் மூன்று நாளைக்கு தயிரில் கொடுக்கவும்.

அஜீரணத்திற்கு மருந்து:- சுத்த ரசகற்பூரம் விராகனிடை.௧, லவங்கம் விராகனிடை.௧,

மிளகு விராகனிடை.ச, வாய் விளங்கம் விராகனிடை.க இவை யெல்லாம் செம்பருத்திச் சார் விட்டரைத்து உருண்டை பண்ணி ஒரு நாளைக்கு சாப்பிடவும். இதற்கு பத்தியம் வருக்க இ உப்பு, நெய் சோறு சாப்பிடவும்.

<u>ஒரு நாள் முறைக்கு:-</u>

கஸ்தூரி மஞ்சள், கடுகு, வெள்ளை அலரி, வெள்ளைப் பண்டு இவைகளை கைக்கு கட்டவும்.

<u>கைமுறை:- நீர்க்கட்டுக்கு:-</u>

சாதிக்காயில் நாலில் ஒரு பங்கு சாபத்திரி ஒரு வ லவங்கம் ஒரு வ ஏலரிசி ஒரு வ அவரையிலை ரசத்தில் கொடுக்கவும். கைமுறை

<u>கைமுறை:- நீரடைப்புக்கு:-</u>

வால்மிளகு விராகனிடை. இடித்து வஸ்திர சூர்யம் செய்து பன்னீர் பலம் கரைத்து ஒரு நாளைக்கு திரம் கொடுக்கவும்.

<u>கைமுறை அநுபோக வைத்தியப் பிரம ரகசியம். ராத்திரி பேதிக்கு:-</u>

வருணம் பலம்.வ, பூரம் பலம்.வ, ரச பற்பம் வ, ரச பிற்பம், சாத்தியப் படாவிட்டால் மருந்து கடையில் (காலமல்) என்று கேட்டால் கொடுப்பார்கள்- அதை வாங்கி வந்து கல்வத்திலிட்டு ஒரு பிடி சாரம் போட்டு அரைத்து மிளகு பிரமாணம் மாத்திரைகளாகச் செய்து நிழலிலுர்த்தி வைத்துக் கொள்ளவும். ராத்திரியில் சாப்பிட்டு படுக்கும் போது கொஞ்சம் சாதத்தில் முழு மாத்திரையாக திரேகத்துக்குத் தக்கின வாறு ஒன்று அல்லது இரண்டு மாத்திரை வைத்து முழுங்கி விடவும். மூன்றாவது சாமமுதல் பேதியாகும். திரேகத்துக்கு அலப்பிராது. காலையில் ருப்பு சாதம் சாப்பிடவும். ~~[illegible]~~

<u>சுக பேதி மாத்திரை:-</u>

நல்ல நிலத்தில் வளரிய கோதும ரவை பலம்.உவ சுத்தி செய்து முளை நீக்கிய வாளம் பலம்.வ இவைகளைக் கல்வத்திலிட்டு இரண்டு பலம் பன்னீர் விட்டு அரைத்து பயறு போல் மாத்திரை செய்து நிழலிலுர்த்தி வைத்துக் கொள்ளவும். அநுபானம் குழந்தைகளுக்கு முலைப் பாலிலும் பெரியவர்களுக்கு சோம்பு திராக்ஷி, சுக்கு, இந்தக் கசாயங்களில் திரேக திடம் தெரிந்து இரண்டு இரண்டு அல்லது மூன்று மாத்திரை கொடுக்கவும். மனக் களிப்புடன் சுகமாய் பேதியாகும். ~~சன்னி முதலானதற்கு ஆனந்த பயிரவ மா~~

<u>சன்னி முதலானதற்கு ஆனந்த பயிரவ மாத்திரை:-</u>

நாவிலிக் கிழங்கு, குதம், மனோசிலை, கெந்தகம், சாதிலிங்கம், வெங்காரம், இந்த சரக்குகள் வகைக்கு விராகனிடை.க வாங்கி எலுமிச்சம் பழம் ரசத்தில் இரண்டு சாமம் அரைத்து சிறு பயறளவு மாத்திரை செய்து வைத்துக் கொள்ளவும். சன்னிக்கு முலைப் பாலிலும் குளிர் சுரத்துக்கு இஞ்சு சாற்றிலும் கொடுக்கவும் தீரும்.

<u>குழந்தைகளுக்கு மாந்த மாத்திரை:-</u>

சுக்கு விராகனிடை.க, திப்பிலி விராகனிடை.க, மிளகு விராகனிடை.க, ஓமம் விராகனிடை.க, ஆமையோடு விராகனிடை.க, கடுகுரோகணி விராகனிடை.க, வாய் விளங்கம் விராகனிடை.க, பெருங்காயம் விராகனிடை.க, இதைக் கல்வத்திலிட்டு உத்தாமணிச் சாறு விட்டு அரைத்து குன்று மணிப் பிரமாணம் மாத்திரை செய்து நிழலிலுலர்த்தி வைத்துக் கொள்ளவும். இதற்கு அநுபானம் அகத்தி இலையை வதக்கி சாறு பிழிந்து அதில் ஒரு மாத்திரை அல்லது மாத்திரையாக் கொடுக்கலாம். கலியாண முருங்கையிலையை வதக்கி அதன் ரசத்திலும் கொடுக்கலாம். தீரும் வியாதிகள் வலது மாந்தம் முக்கு மாந்தம், சுரம் இவைகள் தீரும். இரண்டொரு தருணம் வல சுத்தியாகும். பத்தியம் புளி நீக்கவும். மருந்து கூட்டவும். போது ஆமை யோட்டை மாத்திரம் உத்தாமணிச் சாற்றில் ஒரு ராத்திரி பகல் ஊற வைத்தெடுத்துச் சேர்த்துக் கொள்ளவும்.

குழந்தைகளுக்கு தித்திப்பு பேதி:- திராக்ஷை பழம் பலம்.ரு, கற்கண்டு பலம்.ரு, கடுகு

ரோகணி பலம்.௩, சுத்தி செய் நேர்வாளம் பலம்.ரு, சுக்கு விராகனிடை.க, ஓமம் விராகனிடை.க, மிளகு விராகனிடை.க இவைகளை கல்வத்தில் போட்டு பசு நெய் பலம்.உ புது தேன் பலம்.ரு, கொஞ்சம் கொஞ்சமாய் விட்டு ஜாமம் அரைத்து கல் ஜாடியில் வைத்துக் கொள்ளவும். குழந்தைகளுக்கு ஒரு காசளவு எடுத்து அரிசி அடையில் தடவிக் கொடுக்கவும், பேதியாகும். பெரியவர்களுக்கு கலஞ்சியிடை சாப்பிடவும். பேதி அதிகமானால் மோருஞ் சாதம் சாப்பிடவும். இச்சா பத்தியம். சாயரட்சை வசம்பு கசாயம் கொள்ளவும்.

சுரம் சகலத்துக்கும் :-

வெள்ளைப் பாஷாணம் விராகனிடை.க, சிறுகீரை வேர் விராகனிடை.உ, தருசு விராகனிடை.உ இது மூன்றும் கட்டி மெதி பாகல் சாத்தில் ஒரு சாமம் அரைத்து பயறளவு உருண்டை பண்ணி சீந்தி நல்கு பற்படாகம் சுக்கு, திப்பிலி நாதி தண்ணீரில் கசாயம் எட்டிலொன்றாய் காய்ச்சி அதில் ஒரு குளிகை கொடுக்க சகல சுரமுந் தீரும். கை கண்டது.

குளிர்ச்சி எண்ணெய் :-

சித்தாமணக்கு எண்ணை படி.க, பழஞ் சார் படி.க, இளநீர் படி.க், பசும் பால் படி,க இவைகளை ஒன்பாய் ஊற்றிக் கலக்கி அடுப்பில் வைத்து மெழுகு பதமாய்க் காய்ச்சி வடிக்கும் சமயத்தில் பறங்கிச் சக்கை தனியா சீரகம் வால்மிளகு, லவங்கப் பட்டை சாபத்திரி வகைக்கு பலம்.௩, இளம் வருப்பாக வருத்து மேற்கண்ட எண்ணையில் போட்டு சற்று பொறுத்து உடனே இறக்கி வைத்து கோரோசனை விராகனிடை. குங்குமப்பூ விராகனிடை. கற்கண்டு பலம்.ய செவ்வாழைப் பழம்.அ இவைகளை எண்ணையில் போட்டு கலக்கி வைத்துக் கொள்ளவும். பலம் வீதமாய் ரு நாள் அல்லது எ நாளைக்கு சாப்பிடவும். இச்சா பத்தியம். சகல சூடும் தணியும். தேகம் குளிர்ச்சியாகும்.

தீ சுரத்துக்கு :-

பேய்ப்புடல்.க, மிளகு.க, பேய்ப்புடல் இலவரை பண்ணி மிளகு பதமாய் பொரிச்சு இரண்டும் வெந்நீரில் அரைத்துக் கொடுக்கவும் தீரும்.

அரையாப்பு கிரந்தி புண்ணுக்கு :-

லிங்கம் விராகனிடை.க, பூரம் விராகனிடை.க, மிளகாய் விரை.க, இதுகள் எலுமிச்சம் பழம் சார் விட்டு ஒரு சாமம் அரைத்து பதினுருண்டை செய்து காலை மாலை ஏழு நாளைக்கு கொடுக்கவும். பத்தியம் பசும் பால் விட்டுச் சாப்பிடவும். உப்பு, புளி தள்ளவும். எட்டா நாள் வறுத்து உப்புக் கூட்டவும். நாள் விளக்கெண்ணை பேதிக்கு கொள்ளவும். மேற்கண்ட வியாதி தீரும்.

மூன்று முறை நாலா முறைக்கு :-

வெத்திலையில் உப்பு வெள்ளுள்ளி மிளகு, எருக்கு மொக்கு கள்ளிக் கொழுந்து மேற்கண்ட வெத்திலையைத் தலைமாறி அதற்குள்ளே ஐந்தையும் வைத்து நாலா முறைக்காரனை சுத்தி வந்து அவனுக்கு கொடுக்க காச்சல் நிற்கும். இதுவும்

இதுவும் நாலா முறைக்கு :- களச்சியிலை வெள்ளைப் பூண்டு மிளகு இவை மூன்றையும் இடித்து ரசம் பிழிந்து அய்ந்துவேளை சாப்பிட்டால் மேற்கண்ட சுரங்கள் விடும்.

ரத்தக் கடுப்புக்கு மருந்து :-

நெல்லிக்காய் பலம்.உ, புளியங் கொட்டை தோல் பலம்.க கடுக்காய் பலம்.உ, புளியங் கொட்டை தோல் பலம்.க கடுக்காய் பலம்.உ, புளியங் இது வெல்லாம் மூன்று நாளைக்கு தயிரில் கொடுக்கவும் கடுப்பு நீங்கும்.

சன்னிக்கு பயிரவ மாத்திரை :-

சாதிலிங்கம், வெங்காரம், வச்ச நாபி முவுருவை.கக்கு வீராகனிடை.க இது வெல்லாம் எலுமிச்சம் பழம் சார் விட்டு அரைத்து கடுகு போல் மாத்திரை பண்ணி கேளி

கலந்து கொடுக்கவும். இஞ்சி சாத்திலே கொடுக்கவும். சுர சன்னி தீரும்.

பினிசத்துக்கு நசியம்:-

குங்குமப்பூவு, கோரோசனை, முந்திரி பருப்பு இது வெல்லாம் நெய்யிலே போட்டு காய்ச்சி மூக்கிலே நசியம் பண்ணவும்.

~~தலை வலிக்கு நசியம்:- சுண்டைக்காய் பட்டை பொடி புள்ளி நசியம் பண்ணவும்.~~

சிராசாதி சுரம்:- சிராசாதி பூ.க, கச்சோலக்காய் பூ.க, கட்டேற மெலகு தபாசீர பூ.ரு, சந்தனக்கட்டை பலம்.ரு, நெல் முளி. பலம்.உ தக்கோலம், சாதிக்காய், சாதிரி லவங்கம், வெப்பால் அரிசி வெட்டி வேர், லவுங்கப் பத்திரி இது வெல்லாம்

ரத்தக் கழிச்சலுக்கு:- வெடியுப்பும் சாதிக்காயும் பொடி செய்து சாத்தில் போட்டு தயிர் விட்டு சாப்பிடவும்.

குட்டுக்கு மருந்து:-உப்பூக்காரிலே யிருக்கும் தண்ணீர் வண்டு சோடு பிடித்து காடா துணியில் போட்டு பிழிந்து அத்தர் கலந்து வைத்துக் கொண்டு வலது கை அக்குள்லே அந்த அத்தலிலே விரலிலே எடுத்து நரம்பு பார்த்து தெரிக்கவும். அவனுக்கு இடுப்பு விடும். இது கை கண்டது.

பீனிசத்துக்கு மருந்து:-

புளிச்ச மாகாளங்காய் ஒன்று வேறே துணியிலே போட்டு பிளிஞ்சு அந்த தண்ணீர் நாசிக்கு ஏத்தவும். கை கண்டது.

பாலை சுரக்க, முலைக் குத்துக்கு, கேடுதலுக்கு:-

கொடித்தக்காளி வேர், சீமா நெல்லி வேர் எருமைப் பாலிலரைத்து குடிக்க பால் சுரக்கும்.

முலைக் குத்துக்கு:- கோடச பாலை இலையும் நாயுருவி இலையும் நல்ல எண்ணெயில் கொதிக்க வைத்து எண்ணெயை முலையில் பூசவும், பூவரசன் பட்டையை உணர்த்தி பொடி செய்து எண்ணெயில் குழைத்து புண்ணிலிட மாறும். கெடுதல் சூன்னியம்.

வெகு மூத்திரத்துக்கு மருந்து:-

நீர் பூலாங் கொழுந்து பலம்.உ, ஆவாரை விரை விராகனிடை.ய, மஞ்சள் விராகனிடை.ய இது வெல்லாம் அத்திப் பட்டைக் காயமதில் அரைத்து சுண்டைக் காய் அளவு உருண்டை பண்ணி ஏழு நாளைக்கு சாப்பிடவும். பகலுக்கு மோருஞ் சாதமும் இரவுக்கு நெய் சோறு.

வெள்ளை படை சுருக்கு மருந்து:-

சிறு கள்ளிக் கொழுந்து கிள்ளி விராகனிடை.க, மிளகு விராகனிடை.க, இரண்டும் கலந்து அரைச்சு வெள்ளாட்டுப் பால் சேர். கலந்து காலமே காலமே மூன்று நாளைக்கு கொடுக்கவும். கை கண்டது.

நீர்த் தாரை பெரிசு ஆலல் சிறுகும்:- வெள்ளை குன்றி மணி பருப்பு ஒன்று எடுத்து முலைப் பாலிலே உரைத்து காடா துணியை திரி பண்ணி திரி மேலே அந்த உரைச்ச பால் தடவி நீர் தாரையிலே திரியை விட்டு சலதியாய் திருகி உள்ளுக்கு விட்டு இழுத்துக் கொள்ளவும். அந்தச் சுணம் கள்ளு குடிக்கவும் கை கண்டது. உத்தமம்.

வெட்டு காயத்துக்கு மோலாம் பூ:-

நெய் சேர்.வ, சிறுஉச்சு விராகனிடை.க, இரண்டும் கலந்து தாலாலே வார்த்து தண்ணீர் விட்டு பன்னிரண்டு வெசெக்கு விடப்பியில் வைத்து தடவவும். புளி மிளகாய் தள்ளவும்.

ரத்தக் கடுப்புக்கு மருந்து:- ஆபி சிபுயிடே உள்ளி.க, உள்ளு குருத்து எடுத்து அதுக்குள்ளே அபிப் போட்டு அடுப்பிலே வைத்து அந்திக்கு சாப்பிடவும். அதின் மேல் கிஉந் உஷிடி சாப்பிடவும். உத்தமாம். கை கண்டது.

unani preparations Hence not useful in Siddhu

அராப்புக் கட்டிக்கு:- X

சிறுகள்ளி அடிப் பட்டை பாலனரிக்கி அதற்கே பிள்சே பண்ணி அதின் மேலே வைச்சுக் கட்டிப் போடவும்.

நர்லா முறைக்கு:- X

பூண்டு தேறு.ங, மிளகு.ங, (அரு நாவு கினி.வ) ஒரு வெற்றிலையில் மடித்துக் கொடுக்கவும்..

நர்லா முறை பழுய் நோவுக்கு:- X குருன மின்டால் நிலப்பனைக் கிழங்கு. (விரிய.ங நேறது சேர்.) கச்சுருத யிடை.உ சுட்டி நீர் யிடை.க, சித்திரத்தை .உ யிடே.உ அமுக்கிறுங் கிழங்கு சேர்.வ, சீந்திக் கொடி சேர். பூச்க்கரை கிழங்கு சேர்.ங, பனி ய்ம் அகத்திக் கீரை, புளி அரக்கீரை தள்ளவும். not useful

தாளக பற்பம்:-

வெங்காரம படிகாரம் வெடியுப்பு சவுப்பு நல்ல சுண்ணம்பு இந்த ஐந்தும் ஒன்று சேர்த்து கல்வத்திலிட்டு தண்ணீர் விட்டரைத்து குகை செய்து வைத்து அதற்கு குகைக் குள்ளே சுத்தி செய்த தாளக கட்டியை அதற்குள்ளே வைத்து மேற்கண்ட சில்லு மேல் மூடி சுண்ணம்பு சீலை மண் செய்து புடம் போடவும். அதை எடுத்து தேனிலாவது அல்லது வெண் ணெயிலாவது கொடுக்க க்ஷயம், இருமல், காச முதலானதும் தீரும். பத்தியம் புளி தவிர்க்கவும்.

நீர்க் கட்டுக்கு:-

வெடியுப்பைக் கொண்டு வந்து கறண்டியை காய வைத்து போட்டு எடுத்துக் கொண்டு வெண்ணெயில் கொடுக்க நிற்கும்.

மார் நோவுக்கு:- சுக்கு, திப்பிலியை அரைத்து சட்டியில் போட்டு தண்ணீர் வார்த்து காய்ச்சி இருத்துக் கொண்டு கடுகு, மிளகு உப்பு இது மூன்றையும் பொடி செய்து அந்தி போட்டுக் கொடுக்க மார் நோவு நிற்கும்.

கண்ணுக்கு மை:-

மாதளம் பழ ரசமும் தேனும் இதுகளை சமனாய் சேர்த்து பீசுரோகனை விராகனி டை பொடி செய்து கூடப் போட்டு மூன்றையும் சட்டியில் போட்டு எரித்து தேனும் நிறை யாக இறக்கிக் கொள்ளவும் கண்ணுக்கு போடவும். நேத்திர வியாதி தீரும்.

லிங்க வெள்ளை:-

பூரம் விராகனிடை.க, லிங்கம் விராகனிடை.உ இது இரண்டையும் பொடி செய்து வை வைத்துக் கொண்டு உப்பைப் பொடி செய்து சட்டிக் குள்ளிட்டு இதின் பேரில் செந்தூர பொடி போட்டு பள்ளங் கோலி மய்யத்தில் வைத்து எழு மண் சீலை செய்து உ ஜாமம் எரிக்க பதங்க மேறும். இந்த பதங்கத்தை சுரண்டி பன வெல்லத்தில் ஊட்டு மணி பிர மாணம் வாயில் படாமல் உள்ளே போடவும். கை பிடிப்பு, கால் பிடிப்பு முதலானதும் தீரும். மூன்று நாள் கொடுக்கவும்.

பேதி கட்ட:-

பேதிக்கு வசம்பு, சுக்கு, மிளகை கல்லின் மேலிட்டு புளிச்சத் தண்ணீர் விட்டு காய்ச்சி கொடுக்கவும் பேதி நிற்கும்.

நவாசார பற்பம்:- படிகாரம், வெடியுப்பு, சுண்ணம்பு மூன்றையும் அரைத்து குகை செய்து உணர்த்தி மேற்படி குகையில் நவாசாரக் கட்டி பலம்.க வைத்து சீலை செய்து உணர்த்தி ஐந்து எருவில் புடம் போட பற்பமாகும்.

நவாச்சார பற்பம்:-

சோத்துப்பு பலம்.க, படிக்காரம் பலம்.க. சுண்ணம்பு பலம்.க, மூன்றும் சேர்த்து அரைத்துக் குகை செய்து அதில் ஒரு பலம் நவாசார கட்டியை வைத்து குகை யிரட்டை பில்லை மூடி சீலை செய்து உலர வைத்து கஜபுட புடம் போடவும்.

உள் காய்ச்சலுக்கு மருந்து:-

நல்சீரகம் பலம்.௫, சீனி சர்க்கரை பலம்.௫, எலுமிச்சம் பழம்.௫, சீரகத்தை வஸ்திர காயம் செய்து சர்க்கரை கலந்து பழச் சார் விட்டு வெருகடி பிரமாணம் சாப்பிடவும். தீரும் வியாதி உள் காய்ச்சல், காசம், ரெத்த காசம் தீரும். கை கண்டது.

காமாலைக்கு மருந்து:-

கீழா நெல்லி வேர் பலம்.௫, மிளகு பலம்.௫, பூண்டு பலம்.௫, இது வெல்லாம் பசுவின் கோமியத்திலரைத்து மூன்று நாள் கோமியத்தில் கொடுக்கவும். பத்தியம் கடும் பத்தியம்.

வாத பித்த சுரத்துக்கு:-

கருஞ்சீரகம், கொத்தமல்லி, தேசாபுரம், சுக்கு, மிளகு, சர்க்கரைக் கட்டை விராமிச்சம் வேர் வகைக்கு விராகனிடை.௧, சுட்டு கசாய மிட்டு கொடுக்கவும்.

குழந்தைக்கு பேதி நிற்க:- கசாயம் தாதுசை பத்திரி தம்பருஷ்டகம், மிளகு.

நவாச்சாரக் கட்டு:-

சாரத்து கரு-க்குபம் வெளமலம் உமி நீர் விட்டு அரைத்து நெல் கனம் வசம் செய்து உப்பு.உ மானம் பொடி செய்து கீழ் மேலிட்டு கவசம் செய்து கமலாக்கினியாய் சாம மெரிக்க கட்டும். அதை எடுத்து கல்வத்திலிட்டு குத்தாமணக்கும் பால் லேசு சரக்கு முழுக விட்டு சட்டியில் மணலிட்டு கவசம் செய்த கலயத்தை வைத்து மேல் மணலிட்டு கமலாக்கினி போட செந்தூரமாகும்.

வாயில் ஜலம் வருகிற பேருக்கு:-

பேய்புடல், சுக்கு இரண்டும்.௫ வடுப்பில் கசாயமிட்டு காலமே கொடுக்கவும் தீரும்.

பயித்திய சுரத்துக்கு:-

முசுமுசுக்கை பற்படாகம், கோரைக் கிழங்கு, அதிமதுரம், வாய் விளங்கம், சீரகம், சீந்திக் கொடி, நரிப் பயற்றம் வேர், கசாய மிட்டுக் கொடுக்க தீரும்.

சாரக் கட்டு:- வீரம், வெங்காரம், மனோசிலை, பால், துத்தம் வகைக்கு விராகனிடை.௧ இது நான்கும உமிநீர் விட்டரைத்து ஒரு பலம் நவச்சாரக் கட்டிக்கு பசி வெடியுப்பு சேர்.௧, சோற்றுப்பு சேர்.அரை மாவி போலரைத்து சட்டியில் பாதி கொட்டி அதின் மேல் சாரக் கட்டியை வைத்து அதின் மேல் மற்ற பாதி உப்பைக் கொட்டி மேல் சட்டியை மூடி அடுப்பேத்தி கமலாக்கினியாப் போட்டு புகை போக விட்டு கட்டியை எடுத்துக் கொள்ளவும். நீர்க்கட்டு நீர், ஆம்பல் மகோதரம் முதலானதும் தீரும். அநுபானம் அறிந்து கொடுக்கவும்.

சீரகம் விராகனிடை.௧, சீனி துலா.உ, கட்டுக் கொடியிலை கொண்டு வந்து கடலுலே தண்ணீர் வார்த்து பிசைந்து அதிலே போட்டு தின்னவும். மூன்று நாளைக்கு.

விந்து கட்டுக்கு:-

அமுக்கிரா வேர் பலம்.௫, வஸ்திர காயம் செய்து லவங்கம் விராகனிடை.௧, சாதிக் காய்.௧ இதுவும் வஸ்திரகாயம் செய்துக் கொண்டு அபினி விராகனிடை.௧ கலந்து வெருகடி பிரமாணம் இரண்டு வேளையும் நாற்பது நாள் சாப்பிடவும். பசுவின் பால் சேர்.௰ சாப்பிடவும். இச்சா பத்தியம். ஸ்திரீ போகம் செய்யலாகாது. கை கண்டது.

தாளக பற்பம்:- தாளகம் பலம்.௫, கற்பூர சிலாசத்து பலம்.௧, இது இரண்டையும் சுத்தி செய்து கல்வத்திலிட்டு முலைப்பாலிலாவது பழச் சாறாவது கறசுக்கண் கன்னி சாறாவது இந்த மூன்று திரவத்தில் எந்த திரவ சாறாவது விட்டரைத்து பில்லை தட்டி காய வைத்து புடம் போட பற்பமாகும். இந்த பற்பத்தை வாத நெக்கி தேனில் கொடுக்கவும்.

சங்கு பற்பம்:-

சங்கு கொண்டு வந்து பசும் பாலில் மூன்று நாள் ஊறப் போட்டுக் கழுவி அம்மாதிரி காலங்கலி அடுப்பில் போட்டு உதையத்துக்கு எடுத்து கல்வத்திலிட்டு பொடி செய்து வைத்துக்

தேனிலாவது வெண்ணெயிலாவது இரண்டு மூன்று பணி பிரமாணம் கொடுக்க பெரும்பாடு, சுவாச காசம், மந்தார காசம் இவைகள் தீரும். பாலிய மனிதர்களுக்கு போதும் வயதி சென்றவர்களுக்கு பிடிக்காது.

உள் மூலம் காஞ்சி போக மருந்து:- மடல் துத்தம் பலம்.வ, கெவுரி பலம்.வ, இரண்டு கட்டி பசுவின் நெய் விட்டு நன்றாய் அரைத்து உழக்கு நெய்யில் கலக்கி சூரிய புடம் நாலு நாள் வைத்து ஐந்தாம் நாள் எடுத்து உள் மூலத்தில் கடலி புளியஞ் சிறயில் தணலன்டாக்கி சாணி அதில் வைத்து அதில் உட்கார்ந்திருக்க அனல் காட்டவும். உள் மூலம் காஞ்சு போம். வேர் செத்துப் போம். இதற்கு பத்தியம் அரக்கீரை, புகையிலை, கைப்பு, புளிப்பு ஆகாது. அரை உப்பு கூட்டவும். கை கண்டது.

பிடிப்புக்கு கற்பூராதி எண்ணெய்:-

சங்கிலை நுணப் பட்டை வெள்ளருகு களக் கட்டியிலை சின்னியிலை வகை ஒன்றுக்கு சார் படி.ள விளக்கெண்ணை படி. இது மெழுகு பதமாய் காய்ச்சி வாளம் விராகனிடை.உ சுத்தி செய்து கூட்டவும்.

மூலத்துக்கு:- ரசகற்பூரம் விராகனிடை.உ, சுத்தி செய்து பொடித்து போடவும். வியாதிக்கு தக்கது கற்ண்டியால் மொண்டு கொடுக்கவும். பெரு மரத்துப் பட்டை நாலு பிடி இடிச்சு பிட்டு அவிச்சு கொண்டு அதிலே அழாக்கு நல்லெண்ணை விட்டு கலந்து மூன்று நாள் கொடுக்கவும். முருங்கையிலை கூட்டவும்.

(வேறு) ஊர் பிரண்டை, வெள்ளாட்டு மோரில் நனையப் போட்டு பகலின் மோரில் அரைத்து கலக்கி கொடுக்கவும் மூன்று நாள் கொடுக்கவும். மூலங் கண்டோடே விழும்.

வெள்ளை பசருக்கு மருந்து:-

சிறு கள்ளிக் கொழுந்து கிள்ளி விராகனிடை.க, மிளகு விராகனிடை.க இரண்டு கலந்து அரைச்சு வெள்ளாட்டுப் பால் சேர். கலந்து காலமே மூனு நாளைக்கு கொடுக்கவும். கை கண்டது.

தாளக கட்டு:- சக்களை சாறு படி.உ தாளகத்துக்கு சுருக்கு கொடுத்து பிற்பு நாயுருவி இலையும் காரமும் கூட்டி அரைத்து குகையில் வைத்து சுருக்கி அதிலே சவ்வீரம் கொடுத்து போகிற முன் சுருக்கு கொடுத்த தாளகத்தை அதில் போட்டு வாட்டி எடுத்துக் கொள்ளவும். அதை செம்பு எழுக்கு மின்னு கொடுத்து இறக்க எழுக்கு மூன் வெள்ளி செர்க்க வயது காணும்.

தாளக கட்டு:-

நவாச்சாரம், தாளகம், சீனிக்காரம், உப்பு இதை அரைத்து தாளகத்துக் கவசம் கொடுத்து காடை புடம் இட கட்டும்.

ரச செந்தூரம் உப்பு கட்டி வார்க்கப்பட்ட முறை:-

கட்டின ரசம் விராகனிடை.க, கெந்தகம் விராகனிடை.க, பச்சைக் கற்பூரம் விராகனிடை.க, எலுமிச்சம் பழம் சாறு விட்டு அரைத்து காசிடை புடமிட செந்தூரமாம். கை கண்ட முறை.

உப்பு மூசையிலிட்டு ஒரு மூடி கரி போட்டு ஊதின பிற்பு மணத்தக்காளி இலை அரைத்து அதிலே போடவும் உருகும். அதை எடுத்து கட்டி வார்க்கவும்.

சகல தோஷத்துக்கும் கை கண்ட மருந்து:-

சுக்கு, மிளகு, திப்பிலி, சிராம்பு, அரத்தை, அதிமதுரம், நல்ல வெல்லம், அகத்தியிலை வாட்டிச் சாறு, எருக்கம் பழுப்பு வாட்டிச் சாறு இதில் அரைத்து நசியம் விடவும். கை கண்டது.

சூரியத்துக்கு நசியம்:- எருக்கிலை முருக்கிலை சீந்திலை, கோவையிலை முட்டையிலை,

தும்பையிலை, துளசி யிலை, உள்ளி, வசம்பு, நசியம் விடவும்.

<u>அரையாப்பு கட்டிக்கு பசர்</u>:- மூக்

மூக்கிரட்டையிலை பிட்டு வைத்து கட்டி கண்டவுடனே மூன்று நாள் மேலே வைத்து கட்டவும் கட்டி கரையும்.

மஞ்சள் காமாலைக்கு:- கழற்சியிலை, அவுரியிலை, கோழி அவரையிலை, ஆடு தின்றுப் பாலை யிலை, முடக் கொத்தானிலை, உள்ளி, வசம்பு பெருங்காயம், விளக்கெண்ணெயில் எரித்து ஐந்து நாள் கொடுக்கவும் சோகையும் தீரும்.

சர்வ சுர ராம பாணம்:- சாதிலிங்கம் விராகனிடை.உ, மயேசிலை விராகனிடை.உ, கடுகு ரோகணி விராகனிடை.உ, நேர்வாளம் விராகனிடை.உ, இம் மட்டும் சுத்தி பண்ணி முலைப் பால் விட்டரைத்து கடுகு பிரமாணம் உருண்டை பண்ணி தாப சுரத்துக்கு வெந்நீர் இளநீர் குளிர் காச்சலுக்கு நொச்சிலை மற்றக் காச்சலுக்கு இஞ்சி சுக்கு இதில் கொடுக்கவும் கை கண்டது.

<u>குன்ம வலிக்கு</u>:-

கிராம்பு விராகனிடை.க, சாதிக்காய் விராகனிடை.க, சாபத்திரி விராகனிடை.க, கடுகுரோகணி விராகனிடை.க, மர.மஞ்சள் விராகனிடை.க, மிளகு பலம்.க, திப்பிலி மூலம் பலம்.க, செவியம் பலம்.க, திப்பிலி விராகனிடை.க, பெருங்காயம் விராகனிடை.க, உள்ளிப் பூண்டு பலம்.க, கல்லுப்பு நாழி பொட்டிலுப்பு பலம்.க, மூங்கில் சீவல் பொடி பலம்.க, இந்துப்பு பலம்.க, சவுட்டுப்பு பலம்.க, உப்பு வகை மூங்கில் பொடி இந்த ஐந்தும் எட்டு பங்கிட்டு சீலையில் முடிந்து குமுணி தண்ணீர் வைத்து நாழியான பிறகு உப்பு வகையிலே ஒரு பங்கு மருந்து முடிச்சு ஒன்று போட்டு காய்ச்சி நாழியான பிறகு இறக்கி முடித்து எடுத்து அரைத்துக் குடிக்கவும். இந்தப்படி எட்டு நாள் குடிக்கவும். பத்தியம் கொள்ளுச் சாறு, கச்சக் கருவாடு, மிளகு, உள்ளி, உப்பு கூட்டலாம். குளிர்ந்த தண்ணீர் சஞ்சாரம் பண்ணலாம். வெந்நீர் கொடுக்கவும் மடி வலத்திலே இருக்கிற குன்ம வியாதி விழுந்தாலும் விழும். அது கரைந்து போனாலும் போகும். கை கண்ட முறை.

<u>லிங்க செந்தூரம்</u>:-

முலைப் பாலில் லிங்கத்தை மூன்று நாளூற வைத்து அதை எடுத்து தும்பைச் சார் நாலு சாமஞ் சுருக்கு கொடுத்து எடுத்துக் கலயத்தில் உப்பு கால் படி போட்டு அதின் மத்தியில் லிங்க கட்டியை வைத்து சீலையிட்டு சீலை மண் செய்து ய எருவில் புடம் போடவும். அதை எடுத்து பொடி செய்து வைத்துக் கொண்டு தேனும் நெய்யும் கசாய வகை அநுபான மறிந்து கொடுக்கவும்.

வெள்ளைக்கு மருந்து:-

சீரகம் விராகனிடை.உ, அதி மதுரம் விராகனிடை.க, வெப்பாலை பலம்.உ, சந்தனக் கட்டை பலம்.வ கல்கண்டு பலம்.உ இது வெல்லாம் சூரணம் பண்ணி கல்கண்டு பொடி போட்டு ஏழு நாளைக்கு கொடுக்கவும். பத்தியம் புளி தள்ளவும்.

<u>வெள்ளை பசருக்கு</u>:-

சிறு கள்ளிக் கொழுந்து கிள்ளி விராகனிடை.க, மிளகு விராகனிடை.க, இரண்டும் கலந்து அரைச்சு வெள்ளாட்டுப் பாலில் சேர்.ஏ கலந்து காலமே காலமே மூன்று நாளைக்கு கொடுக்கவும். கை கண்டது.

<u>வயறு எரிவு விகாளத்துக்கு</u>:- மிச்சன் பழ சாற்றில் ஒரு நாளூறவைத்து நிழலில் உலர்த்தி வெய்யிலில் ஒரு நாள் காயப் போட்டு பின்பு இள வருப்பாக வறுத்து சூரணம் பண்ணி சர்க்கரை கலந்து மூன்று விரல் கொண்டது வெந்நீரில் கொடுக்கவும்.

<u>சட்ட முனி சாரக் கட்டு</u>:-

கேளப்பா முத்திருவைக் கருவில் கட்டி கெடியாகச் சாரத்தின் மேலே பசி
வாளப்பா உள் சாற்றில் வைத்து நன்றாய் வாலுகையிலேத்தி யிதை தீயை மூட்டு
தாளப்பா தங்கம் போலிருகிச் கட்டும் சாரத்தின் புகை யடக்கிச் சுள்ளம் போலாம்
நாளப்பா சார வித்தை புகந்த காலம் நலமாக ஆடுகிறும் எரை காரே.

விகாளம் உ2 மாதம் பேய் இதகாக்கு புகை:- not useful

புலித்தோல் கெருட நெற்றி கழுகு இறகு, மயிலிறகு, முதலை பல்லு, கரடி உப்பு கண்டம் எரு முள்ளு பகாள கட்டை இவை யெல்லாம் ஓட்டில் உண்டாக்கி கற்குங் குங்கிலியம் இவை கூடப் போட்டு புகையிட்டு விடவும். கை கண்ட முறை.

வெகு மூத்திரத்துக்கு:- 16.2.63.

நீர்ப் பூலா கொழுந்து விராகனிடை.உ, ஆவாரை விராகனிடை.ய இது இரண்டும் அத்திப் பட்டை கசாயம் செய்து சுண்டைகாய் பண்ணி ஏ நாளைக்கு சாப்பிடவும். நாக விர்

திலே பஸ்பம் பன லேகியம்:-

சீரகம் பலம்.க, மிளகு பலம்.க, சாதிக்காய் துலா.க, கசகசா பலம்.க, லவங்கம் பலம்.க, லவங்கப் பட்டை பலம்.க, பாதாம் கொட்டை சேர், கொப்பரை சேர்.வ, சுக்கு பலம்.ச சர்க்கரை பலம்.உ நெய் சேர்.க மதனகாம்பு துலா.க, உளா சிட்டு.ய பனை வெல்லம் கொட்டங்கச்சி .உ கை கண்ட முறை. துத்தம் கட்டு தாம்பிரம் உத்தமாம். நாகம் புகை அடங்கி கட்டுமாம். என்று வெகு முறை.

சாரக் கட்டு:-

காரம் சினம் பூநீறு சிப்பி நல்ல இறகள் சிப்பி சுன்ன ஜெயநீர் விட்டு மூன்று நாள் அரைத்து குகை செய்து சாரத்துக்கு கவசம் கொடுத்து மேல் சுண்ணம் பூசி சீலை செய்து ரவியில் காய வைத்து ஒரு முழம் பிடமாய் முபுடம் போடவும். மணலில் நடுவே சாரம் வைத்து மேல் மணல் மூடி புடம் போடவும். சாரம் கட்டுபடும். இவ்விதமான மூன்று படம் போட சாரத்தை எடுத்துக் கொண்டு சட்டியில் நாயுருவி சாம்பலில் வைத்து மூன்று நாள் விடாமல் எரித்து எடுக்க முழு கட்டு ஆகுமாம். சகல சரக்கும் சாகுமாம்.

கெந்தக பற்பம்:-

சுத்தி செய்த கெந்தகம் பலம்.க-க்கு கொம்பு பாகல் இலைச் சாறு விட்டு அரைத்து நாள் அரைத்தரைத்து நாலு பலம் ரு பில்லை கவசித்து எ நாவெளி காட்சியாக வைத்து கவசித்து காய வைத்து.ரு, காட்டு வறட்டியில் புடம் வைக்கவும். எட்டில் ஒரு கூறு பற்பமாம். இதுப்பைப் பூச்சாறு முன் கண்டபடி எழு நாளரைத்து ய காட்டு வறட்டியில் புடம் நான்கில் ஒரு கூறு பற்பமாகும். கையாந்த கரை சமூலம் சாறு.எ, நாளரைத்து கவசித்து யரு காட்டு வறட்டியில் புடம் வைக்க எட்டில் மூன்று கூறு பற்பமாகும். ஆடு சமூல சாறு விட்டு முன்படி அரைத்து.உய காட்டு வறட்டியில் புடம் வைக்கவும். அரை கூறு பற்பமாம். வெண் குன்றிச் சமூல சாறு விட்டு அரைத்து.உரு காட்டு வறட்டியில் புடம் வைக்க எட்டில் ரு.கூறு பற்பமாம். நிலப் பனைக் கிழங்கு சாறு விட்டரைத்து ஙு நாள் பிரதி திமும்ஙய காட்டு வறட்டியில் புடம் வைக்க முக்கால் கூறு பற்பமாம். புல்லாந்தி சமூல சாறு விட்டு அரைத்து 2 நாள் கவசம் செய்து .ஙரு காட்டு வறட்டியில் புடம் வைக்கவும். எட்டில் ஏழு கூறு பற்பமாயிருக்கும். பற்பத்தை ஆலின் கொழுந்திலைச் சாறு விட்டு அரைக்க சய வறட்டியில் புடம் வைக்கவும். முழுக் கூறு பற்பமாம்.

குளிர் வராத வரட்டு காச்சல் சுரத்துக்கு:-

ஒரு காசு செம்பு, அதிமதுரம், திராக்ஷை பழம் தட்டி கசாய மிட்டு சுண்டக் காய்ச்சி இறுத்துக் கொடுக்கவும் சுரம் நீங்கும். கை கண்ட முறை.

முகத்தின் வங்குக்கு மருந்து:-

பங்காய் இருக்கும் அரிதாரம் அரைப்பலம் வாங்கி கட்டி நற்கோவை சாறு இழைத்து வழித்தெடுத்துக் கொள்ளவும். பத்து நாள் இரு நேரமும் பூசவும். வங்கு உதிர்ந்து விடும். கை கண்ட முறை.

காமாலைக்கு:- எருமை சாணிப் பாலில் எருமைத் தயிர் கூட்டி, சீரகம், வெங்காயம் கூட்டி அரைத்து பாலில் கூட்டிக் கொடுக்கவும். காமாலை தணிந்து போகும். கை கண்ட மருந்து.

<u>காமாலை சோகைக்கு</u>:- பசுவின் கோமியத்தில் கடுக்காய் விரை எடுத்துப் பொடி பண்ணி கோமியத்தில் போட்டு 6,7 வடி கட்டவும். அரைக்கால் படி கால் படி தண்ணீர் கொடுக்கவும். ஐந்து நாள் கொடுக்கவும். மண்டை*சூலை

<u>மண்டை சூலை, எவ்வித தலை வலிக்கும்</u>:-

வில்வ வேர் பலம்.1, மிளகு பலம்.1, லவங்கம் பலம்.1, சுக்கு பலம்.1 சாம்பிராணி பலம். வெள்ளைப் பூண்டு பலம்.௧ சிவப்பு சிந்நீர் மூலம் பலம்.1, வெள்ளருகு தண்ணீர் விட்டரைத்து உருண்டை செய்து நல்ல எண்ணெ படி.௧, பசும்பால் படி.௧, சட்டியிலிட்டு அடுப்பேற்றி மெழுகு பதத்தில் சோற்றுக் கற்றாழை சோ. கமுகின சோ கொஞ்சம் போட்டு எண்ணெ வடித்துக் கொள்ளவும். தலைக்கு தேய்த்துக் கொள்ளவும்.

பத்தியம் வாய்வு பதார்த்தம் நீக்கவும். இரண்டாம் நாள் விளக்கெண்ணெ பேதி வாங்குவது அதிக குணமுண்டாகும். கண் வலி, கண் சிவப்பு நீர் வடிதல் முதலியதும் தீரும். கை கண்ட முறை.

<u>காது கேளாத பேருக்கு</u>:-

வெள்ளைப் பூண்டு. வடக்கே போற முருங்கை வேரும் முத்தெருக்கும் செவி. சமூலமும் திருகு கள்ளிப் பால் நன்று நல்லெண்ணெயில் போட்டு கொதிக்க வைத்து காது கேளாத செவியில் உ துளி விடவும். காது கேட்கும்.

<u>விழுதி எண்ணெய்</u>:-

சிற்றாமணக்கெண்ணெ பசு நெய் விழுதிச் சாறு வகைக்கு படி.௧, சேர்த்து அதில் சுக்கு மிளகு, திப்பிலி, வசம்பு, வெங்காயம், கோஷ்டம், லவங்கம், ஏலம் வகைக்கு பலம்.வ பசும் பாலில் அரைத்து கரைத்து எடுத்து வடித்து வ சேர் வீதம் ங நாளைக்கு காலையில் சாப்பிட்டு உப்பில்லாத பத்தியமாயிருக்கவும். கற்ப வாய்வு, சூதக வாய்வு, சூதக வலி, கற்பத்திலுண்டாகிற புழுக்கள், கற்ப சூலை முதலிய சகல கற்ப ரோகங்களும் இசிவும் குணமாகும். கற்பம் உண்டாகும் கை முறை. பிரான் ரகு அமிர்தம்.

<u>ஆரோக்கிய ஸ்நானம்</u>:-

ஓமம், மஞ்சள், மிளகு, வேப்பிலை, பசும் பாலில் அரைத்து தலையில் தேய்த்து ஸ்நானம் செய்து சாம்பிராணி தூபம் போடவும்.

பிராஸ்திரி:- காய செந்தூரம், வெள்ளை தூபம் மொருக்கு.

<u>வயறு கழிகிறது அதிகப் பட்டால் மாத்து சைத்து</u>:-

முருங்கையிலைச் சாறும், பசுவின் வெண்ணெயும் மாத்து பதற் கோவை நன்று நருக்கி பிசைந்து ஊறிய தண்ணீர் கொடுக்கவும்.

அரையாப்பு சட்டிக்கு:- முக்கரட்டை யிலை பிட்டு வைத்து கட்டி கண்ட உடனே மூன்று நாள் மேலே வைத்து கட்டவும் கட்டி கரையும்.

<u>பலகறை சங்கு சுண்ணம்</u>:-

குடுவையில் எலுமிச்சம் பழ ரசம் 3 நாள் ஊறி அப்படியே ½ கெஜபுட மிட்டு பழ ரசத்தில் கொடுக்க வயிற்று வலி தீரும். ப ¶

<u>பசி தீபனத்துக்கு</u>:-

ஓமம் பலம்.1, குரோசாணி ஓமம் பலம்.1, நாய் கடுகு பலம்.1, தூள் செய்து ஒன்றரைப் பலம் வெல்லத்தில் பிசைந்து புங்கங் கொட்டை பரமாணம் புசிக்கவும்.

<u>சர்வ சுர ராம பாணம்</u>:-

சாதிலிங்கம் விராகனிடை.உ, மருதோன்றி இலை விராகனிடை.உ, கடுகுரோகிணி விராகனிடை.உ, நேர்வாளம் விராகனிடை.உ இம் மட்டும் சுத்தி பண்ணி முலைப் பாலில் விட்டரைத்து கடுகு பிரமாணம் உருண்டை பண்ணி தாப சுரத்துக்கு நொச்சிலை மற்ற காச்சலுக்கு இஞ்சி, சுக்கு இதில் கொடுக்கவும். கை கண்டது.

<u>சிறு சிரங்குக்கு மருந்து</u>:-

சங்கிலி பாதாம்.உரு, காலஞ்சி விரை.உ யிடை.உ அதே பருப்பு எடுத்து களஞ்சி விரை கல்ல பாத்து பொருக்கி தயிரிலே இரண்டும் அரைத்து புது கலயம் வாங்கி அதில் இது வெல்லாம் வார்த்து தயிரு வார்த்து பனியிலே வைத்து காலமே கட்டி வெயிலி லே யிருக அக்கினி முக குளிச்சு தயிரு வார்த்து சோறு தின்று படுக்கவும். மூன்று நாளைக்கு மலை நாட்டு

<u>ஊறு சிரங்குக்கு மருந்து</u>:-

மயில் துத்தம் விராகனிடை.க, வெண்ணை துலா யிடை.க, மெல்லிஷ ஹசா அரைச்சு கலந்து இழைச்சு வைக்கலம். இ

<u>இஞ்சி சர்ப்பத்து</u>:- இஞ்சி ரசத்தை இரண்டு மணி நேரம் அசையாமல் வைத்து தெளிவான ரசத்தை இறுத்துக் கொண்டு அந்த எடைக்கு இரண்டத்தனை சர்க்கரை சேர்த்து கலக்கி அடுப்பேத்திக் காய்ச்சி மது பாகத்தில் அதாவது தேன் போலே காய்ச்சி வடித்து வைத்துக் கொள்ளவும். அளவு இல்லது உ.ரூபாயிடை கொடுக்கலாம். பித்த சாந்தி செய் யும். இரத்த கொதிப்பை யாற்றும். பசி தீபன முண்டாம். எடைக்கு எடை சலம் கூட்டி சாப்பிடவும். நாரத்தம் பழம் வேண்டியது எடுத்த அதற்கு இரட்டிப்பு சர்க்கரை சேர்த்து காய்ச்சி வடித்துக் கொள்ளவும். உ விராகனிடை முதல் பு விராகனிடை வரையில் எடுத்து கொஞ்சம் சலத்தில் கலந்து கொடுக்கலாம். பித்தம் தாகம், சுரம் வாந்தி அரோசிகம் இவை உள்ள காலங்களில் உபயோகிக்கலாம்.

<u>~~இஞ்சி வயிற்று ரெத்தின சங்கிரகம்~~: மாதளம் பழ சர்பத்து</u>:-

மாதள பழ ரசம் வேண்டிய மட்டில் எடுத்துக் கொண்டு அந்த எடைக்கு இரண்டு பங்கு சர்க்கரை கலந்து அடுப்பேத்தி தி தேன்போல் பாகு பதமாய் காய்ச்சி வடித்து கொஞ்சம் பன்னீர் கூட்டி வைத்துக் கொள்ளவும். சுரம், தாகம் உள்ளனல், மேகருடு இரத்தக் கெடுதி இவை உள்ளவர்கள் 1,2 ரூபாயிடை சாப்பிடவும்.

<u>எலாதி சூரணம்</u>:-

ஏலம், சந்தனம், அதிமதுரம், நெல்லி வற்றல், வால்மிளகு, இவைகளின் சூரணம் வகைக்கு பலம்.க, வெள்ளை சர்க்கரை பலம்.$2\frac{1}{2}$ யாவும் கலந்து வைத்துக் கொண்டு அக்கினி மந்தம் வயற்றுப் பொருமல் வயற்று வலி உஷ்ண பேதி இருமல் இவை முதலிய ரோகங்களுக்கு ஒரு விராகனிடை சூரணத்தை வெந்நீரில் கலந்து கொடுக்கலாம். இப்படி 2,3 நாள் கொடுக்கவும். இங்கிலிஷ் முறை.

<u>கருணைக் கிழங்கு சூரணம்</u>:-

கருணைக் கிழங்கு பொடி பலம்.12, சுக்கு, திப்பிலி, தானிக்காய், நெல்லி வற்றல் இவைகளின் பொடி வகைக்கு பலம்.1 நல்ல வெல்லம் 18 பலம் எடுத்து பாகு செய்து அதில் மேற்படி சூரணங்களை தூவி லேகியம் போல் கிளறி ஒரு விராகனிடை பில்லை களாக செய்து வடாம் போல் உலர்த்தி வைத்துக் கொண்டு மூல ரோகமுடையவர்களுக்கு 1 பில்லையை பொடித்து 2 பலம் தயிரில் கலந்து கொடுக்கவும். இப்படி இரு வேளையும் வியாதி குணப்படுமளவும் கொடுக்கலாம்.

<u>செம்மேகங்களுக்கு பேரண்ட பற்பம்</u>:-

பால் போலிருக்கும் அண்ட ஓட்டை பூ நீரில் கொதிப்பித்து கழுவி எடுத்து எருமைச் சாணி அடை மத்தியில் வைத்து 1 கெஜபுடமிட்டு 4-க்கு 1 பூரம் சேர்த்து வாய் நீலாலரைத்து பில்லையை உலர்த்தி ½ கெஜபுடமிட்டு பணவிடையாக தேனில் ½ மண்டலம் கொடுக்கவும் செம்மேகம் தீரும்.

<u>வெட்டி வேர் தயிலம்</u>:- வெட்டிவேர் பலம்.10 முன் போல் கசாயம் வடித்து எள் எண்ணெய் பலம்.15, பாலிலரைத்து அதிமதுரம் பலம்.1 கூட்டிக் காய்ச்சி வடித்து முழுகி வர பீனிசம் மண்டை சூலை குட்ட சொறி புரநீர் கோர்வை கண் புகைச்சல், கால் நோய்

<u>கீழா நெல்லி</u>:-

கீழா நெல்லி சமூலம் பலம்.25, எட்டுக்கு ஒன்றாய் காய்ச்சி வடித்து எள் எண்ணெய் பலம்.100 சர்க்கரை பலம்.5 காய்ச்சி வடித்து முழுக பித்தம் யாவும் தலை சுத்து வாய் நீருறல் உஷ்ணம், கை கால் எரிவு நீங்கும்.

<u>கஸ்தூரி மாத்திரை</u>:-

கஸ்தூரி குன்றியிடை குங்குமப்பூ ஐந்து குன்றியிடை, கோரோசினை குன்றியிடை இவைகளை கல்வத்திலிட்டு குற்றமற்ற பெண்களின் முலைப் பாலில் அரைத்து குன்றி மணியளவு மாத்திரைகள் செய்து நிழலில் உலர்த்திக் கொள்ளவும். பித்த சுரத்துக்கு இஞ்சி ரசத்திலும் வாத சுரத்துக்கு தேனிலும் திரிகடுகு கசாயத்திலும் மாந்த சுரம் பொருமல் இவைகளுக்கு 2,3 கொடுக்க குணமாகும்.

<u>கோரோசனை மாத்திரை</u>:-

கோரோசனம், சுக்கு, திப்பிலி, மிளகு, ஓமம், சாதிக்காய், அரத்தை, வசம்பு உள்ளி, குங்குமப்பூ, இவைகளை சமனிடை எடுத்து மணத்தக்காளி ரசத்தில் ஒரு சாமமரைத்து கல்வத்தில் அப்படியே உலர்த்தி மறுநாள் கம்மாறு வெற்றிலை சாற்றால் ஒரு சாமமரைத்து அப்படியே கல்வத்திலாற விட்டு மறுநாள் சுத்தி செய்த ரசகற்பூரம் கூட்டி முலைப் பால் விட்டு ஒரு சாமமரைத்து பச்சை பயறளவு மாத்திரை செய்து நிழலில் உலர்த்தி வைத்துக் கொள்ளவும். குழந்தைகள் பிணிக்கு தேனிலிடவும்.

<u>அரிதார பற்பம்</u>:-

அகத்திக் கீரை, விளாங்காயளவு அரைத்து அரிதாரத்துக்கு கவசம் கட்டி கோழி புடம் போட பற்பமாகும்.

(வேறு) சுத்தி செய்த தாரத்தை கோவையிலை சாற்றில் 8 சாமம் அரைத்து பில்லை தட்டி காய வைத்து 7 சீலை வலுவாய் செய்து 6 எருவில் புடம் போட்டு அதின் பின் முன் போலவே கோவையிலைச் சாற்றிலரைத்து பில்லை காய வைத்து 4 எருவில் புடம் போட பற்பமாகும். பணவிடை அனுபானத்திலிட தீரும் வியாதிகள் 18 வித எலிகடிகள் போகும். அதிலுண்டாகும் இளைப்பு, இளை காசம், க்ஷயரோகம், யாவும் நிவர்த்தியாகும்.

<u>கட்டுவாதி மாத்திரை</u>:-

ஒரு சாதிக்காயை துளைத்து அதில் 6 உளுந்து நிறை அபினியை வைத்து மஞ்சள் கவசம் செய்து அதற்கு மேல் இரண்டு மூன்று புரை துணி சுத்தி புற்று மண் அல்லது அரைத்த மண்ணை பூசி நன்றாய் உலர்த்தி அதற்கு தகுந்த சிறு புடமிட்டு எடுத்து கவசத்தை நீக்கி சாதிக்காயும் அபினியும் சேர்ந்த எடைக்கு சரியிடை பேரீச்சம் பழம் சேர்த்து முலைப் பால் விட்டு அரைத்து பச்சைப் பயறளவு மாத்திரை செய்து வைத்துக் கொள்ளவும். 1 குளிகை தேனில் இழைத்து கொடுக்கவும்.

<u>மகா கட்டுவாதி மாத்திரை</u>:-

ஒரு*சாதிக்காயை*துளைத்து*அதில் சாதிக்காய், சாதிபத்திரி, லவங்கம், ஏலம், அதிமதுரம், அதிவிடையம், அபினி, கஞ்சா குரோசாணி ஓமம், கோரைக் கிழங்கு, வெந்தயம், சீரகம், சிறுநாகப்பூ, புளியாரை, வாழைப் பூ, மாதுளம் பிஞ்சு இவைகளை சரியிடையாய் எடுத்து அபினி தவிர மற்றதை இடித்து வஸ்திர காயம் செய்து பசும் பாலில் பிட்டவியல் செய்து நிழலில் உலர்த்தி கல்வத்திலிட்டு அபினியையும் சேர்த்து வாழைப் பூ சாறு லாவது புளிப்பு மாதுளம் பழம் சாற்றிலாவது அரைத்து மிளகளவு மாத்திரை செய்து வைத்துக் கொள்ளவும். சிறுவர்க்கு ஒரு மாத்திரையும் பெரியவர்களுக்கு இரண்டு மாத்திரையும் பொடித்து கொஞ்சம் சர்க்கரை கலந்து கொடுக்கவும். இப்படி தினத்துக்கு 2 அல்லது 3 தடவை கொடுக்க சகல பேதியும் கழிச்சலும் கட்டும்.

<u>தங்க ரேக்கு மாத்திரை</u>:-

தங்க ரேக்கு.1, கஸ்தூரி.1, கோரோசனை.$7\frac{1}{2}$, பச்சை கற்பூரம்.5,

குங்குமப்பூ.5, மயில்ரோசனம்.1, படிகார சுண்ணம்.½ இவைகளை ஈசுர மூலி ரசத்திலரைத்து மிளகு பிரமாணம் மாத்திரைகள் செய்து நிழலில் உலர்த்தி வைத்துக் கொள்ளவும். இரவில் புளி சேர்க்காத போசனம். பசும் பால் விட்டு போசனம் செய்த பிறகு 1 மாத்திரை எடுத்து பொடித்து சர்க்கரை கலந்து சாப்பிட்டு விட்டு சீதளம் சுரம் முன்னி இருந்தாலும் நீங்கும்:

சகல உஷ்ணத்திற்கும் ஏலாதி சூரணம்:-

ஏலம், சீரகம், சன்ன லவங்கப் பட்டை, அதிமதுரம், நெல்லி வற்றல், சிறு நாகப்பூ, கருவேப்பிலை ஈர்க்கு சந்தனத்தூள் சடாமாஞ்சி, சோம்பு வகைக்கு பலம்.1, கொத்தமல்லி விரை பலம்.12, கற்கண்டு பலம்.24, இதில் கற்கண்டு தவிர மற்ற சரக்குகளெல்லா இடித்து வஸ்திர காயம் செய்து கற்கண்டு தூள் செய்து கலந்து புதிய கலசத்தில் வைத்துக் கொண்டு ஒரு வேளைக்கு 2 விராகனிடை வீதம் இரு வேளையும் உட்கொண்டு வந்தால் சகல உஷ்ண ரோகம், பித்தம், மூத்திர எரிவு, கை கால் எரிவு இவை அகல மாகும். அநுபோகமான மருநது.

முத்து பற்பம்:-

கெட்டி முத்து பலம் எடுத்து பீங்கானி கோப்பையில் போட்டு தேன் விட்டு 3 நாள் ஊற வைத்து அலம்பிய பின் சங்கம் பழம் சாற்றில் ஒரு நாள் ஊற வைத்து எடுத்து பாப்பார முள்ளி பழத்தின் ரசத்திலுல் மெழுகு போலாகு மளவும் அரைத்து பில்லை தட்டி ஓட்டிலிட்டு காய்ந்த பின் மேலோடு மூடி நாலைந்து சீலை செய்து காய்ந்த பிறகு 30 எருவில் புடம் போட்டு ஆறிய பின் எடுத்துக் கொள்ளவும். இதை தங்க பற்பத்துடன் சரியிடை கூட்டி நெய்யில் வெண்ணை பால் அல்லது தகுந்த லேகியங்களில் சாப்பிட அப்ரிமிதமான தாது புஷ்டி உண்டாகும்.

தங்க பற்பம்.-

இந்தன விழுக்கும் தங்க ரேக்கு விராகனிடை.½ எடுத்து உப்புலாங் கொடியை இடித்து பிழிந்து சாற்றை வடிகட்டி அதிலுல் மேற்கண்ட தங்கத்தை இரண்டு சாமம் அரைத்து பில்லை தட்டி காய்ந்த பின் ஓட்டிலிட்டு மேலோடு மூடி மூன்று சீலை மண் செய்து காய்ந்த பின் 30 விரட்டியில் புடமிடவும். ஒரு சமயம் சுத்த கருப்பா யிருந்தால் மேற்கண்ட மூலிகை சாற்றில் பிசைந்து பில்லை தட்டி மறுபுடம் போட்டால் சாம்பல் வர்ணமாயிருக்கும் இதை அஷ்ட வாய்வு மேக வாய்வு பித்த வாய்வு சர்வ சன்னிதம் சர்வ தோஷங்களும் நீங்கும், வலிப்பு, இளைப்பு, சிறுனி பெரும்பாடு, பிரமியம் பித்த வெட்டை எந்த வியாதியுந் தீரும். அரை அரிசிக்கு மேல் ஒரு அரிசிக்குள் கொடுக்கவும். பால், தயிர் நெய் சாப்பிடவும்.

சொர்ண சுத்தி:-

தங்க கட்டுக்கு செம்மண்ணுருலே லேபனங் கொடுத்து கரி நெருப்பில் வைத்து சிவக்க காய்ச்சி ஊற வைத்துக் கொள்வதே சுத்தியாம்.

சொர்ண பற்பம்:-

சுத்தி செய்த தங்கத்தை மெல்லிதாக தகடுகள் தட்டி ஒரு பலம் எடுத்து அதற்கு கால் பலம் பொன்னுமிளை யீள எலுமிச்சம் பழ சாற்றுல் அரைத்து தகட்டை ஓட்டில் வைத்து சீலை மண் செய்து கெஜபுடம் போட பற்பமாகும்.

(வேறு முறை) சுத்தி செய்த தங்கத்தை மெல்லியதாக தகடடித்து அதற்கு சமபாகம் கெந்தகத்தை எடுத்து கரம்பு ரச மிட்டு அரைத்து அதை தகட்டுக்குப் பூசிக் காய வைத்து இப்படி 7 தரம் செய்து காய்ந்த பின் ஓட்டில் வைத்து சீலை மண் செய்து கெஜபுடம் போட்டு ஆறிய பின் எடுத்துப பார்க்கப் பற்பமாகும். இதில் ஒரு பணவிடை அநுபானத்தோடு உட்கொண்டால் ராஜ க்ஷயம், முதல் கடிய ரோகங்களும் சொஸ்தமாகும்.

தாளக பற்பம்:-

இரண்டு பலம் சுத்தி செய்த தாளகத்தை வாழைக் கிழங்குக்குள் வைத்து மூடியிட்டு சீலை மண் வலுவாய் செய்து உலர்த்தி விரலிக் கல் கூடு புடம் போட்டாலும் சரி அல்லது முக்கரைச் சாரணை சமூலம் 2 நார்த்தங்காய் அளவு அரைத்து அதின் மத்தியில் தாளக கட்டி வைத்து மூடி ஒரு வாய் அகன்ற சட்டியத்தில் வைத்து அகலால் மூடி எட்டு சீலை மண் வலுவாய் செய்து 12 மணி நேரம் தீபாக்கினியாக எரித்தாலும் சரி அது பற்பமாகும். அதில் அரை முதல் 2 குன்றி மணியிடை அநுபானத்தில் கொடுக்க க்ஷயம்.4, கிருந்தி.4, சூலை.18, சுரம்.64, குஷ்டம்.18, மேகம்.20 முதலிய பற்பல ரோகங்கள் குணமாகும்.

பேய் நாய் கடியின் குணம்:-

நடபான ர
பண்பானதாக நஷ்டம் வாய் நீருறல், பாங்கான கண் மயக்கம், காது மந்தம்
நன்பான ரத்தமுடன் மார்பு நோயாம் நலமான சிரோபாரமதிகம் காட்டும்
தன்பான தேகமது மறத்தல் தோன்றும் தடிப்பான மூர்ச்சையுடன் விடமேயாகும்
மன்பான நாய் போலே குலைத்துக் காட்டும் மதிப்பான யூகமுனி மதித்தவாறே.

நிவர்த்தி:- கற்றாழை மடல், உப்பும் அரைத்து கடித்த வாயில் பூசவும். பேய்த்தி வேரும் ஆலம் வேரும் வேப்பிலை வேரும் மூன்றையும் கழுநீரில் போட்டு காய்ச்சி மேலில் தேர் கழுவிடவும் விஷ மிறங்கும். உள்ளுக்கு போசனம் குளிகை மாத்திரை பேதிக்கு கொடுக்கவும்.

(2-வது மருந்து) போசனக் குளிகையாவது பூரம் விராகனிடை.க,. இரச பற்பம் விராகனிடை.க வாளம் விராகனிடை.ச கோதுமை ரொட்டி சதை உள் சதை விராகனிடை.ய இதுகளை மேற்படி ரத்தில் போட்டு அரைக்க மெழுகாகும். அதை பட்டாணி பிரகாரம் மாத்திரை செய்து கொடுக்கவும். ஆளான பலத்துக்கு தக்கபடி 2,3 வேளை கொடுக்கவும்.

வி காலம் 2 மாதம் பேய் பிசாசுக்கு புகை:-

கருட இறகு, கழுகு இறகு, மயிலிறகு, முதலை பல்லு கரடி உப்பு கண்டம் ( ) கட்டை அவை யெல்லாம் ஓட்டில் நெருப்புண்டாக்கி குங்குலியம் சக்கை இவைகளை போட்டு புகையிட்டு விடவும். வகாலம் 2 மாதம் பேய் இவை தீரும். கை கண்டது.

ரச பற்பம்:-

மண்பாத்திரத்தில் 1 பலம் கெந்தகத்தைப் போட்டு காடாக்கினியா எரித்து கந்தகம் உருகும் சமயத்தில் 7 பலம் ரசத்தை விட்டு கிளாவிக் கொண்டிருந்தால் ரசம் கெந்தகத்துடன் கலந்து கறுத்த தூளாய் விடும். பிறகு வேறொரு பாண்டத்தில் பாதிக்கு செங்கல் பொடியை போட்டு அதின் மேல் 8 ஆழாக்கு கறி உப்பைக் கொட்டி அதின் மேல் ரச கந்தியை வைத்து வேறொரு பாண்டத்தால் மூடிப் பொருத்தி வாய்க்கு களி மண் தடவி ஏழு சீலை மண் வலுவாய் செய்து காடாக்கினியாய் நாலு சாமம் எரித்து குளிர வைத்து உடைத்து பார்த்தால் மேல் பாண்டத்தில் ரச பற்பம் பதங்கித்திருக்கும். அதை எடுத்து பணவிடை வீதம் அநுபானத்திலிட சுரம் 64, மந்தம் 8, காசம்.5 ஜன்னி13, நேத்திர ரோகம்.94, அதிசாரம்.6, மேகம்.20 முதலிய பற்பல கடூர ரோகங்கள் குணமாகும்.

சிங்கி பற்பம்:-

குப்பை மேனியிலையை அரைத்து மான் கொம்புக்கு கவச மிட்டு குக்குட புடம் போட பற்பமாகும். இதுவும் பிரவாள பற்பமும் சமமாக சேர்த்து பு சிரேச்சு வீதம் தினம் 2 தடவை அநுபானத்திலிட இருமல் சுவாசம்.5, காசம்.5, க்ஷயம்.4 முதலிய கப ரோகங்கள் 96 குணமாகும்.

லகு தாம்பிர பற்பம்:-

தாம்பிரத்தை சுத்தி செய்து அரத்தால் ராவின பொடியை ஒரு புது சிறு வாணலில் போட்டு தீபாக்கினியாக எரித்து ஒரு படி புளியாரை சாற்றல் சுருக்கு கொடுக்க பற்பமாகும். அதை 2 அரிசியிடை நெய்யில் 2 நாளைக்கொரு தரம் சாப்பிட மேகம்.உய, கிருந்தி.9,

சூலை 18 முதலிய கடூர ரோகங்கள் குணமாகும். வெள்ளை மேகத்துக்கு இதை பத்தப் போட தீரும். கரு மேகத்துக்கு ஆட்டுப் பாலில் கலந்து வேறு இடத்தில் படாமல் தடவி வர தீரும். பத்தியம் வென்னீர் ஸ்நானம் செய்யவும்: தயிர் மோர் தள்ளவும்.

புளியாரை எண்ணெய்:-

சிற்றாமணக்கெண்ணெயும், கையாந்தகரை எலுமிச்சம் பழம், புளியாரை வல்லாரை, இவைகளின் சாறு வகைக்கு படி.1 சேர்த்து எரித்து வடித்து அதில் கோரோசினை விராகனிடை.½ சூரணித்து போட்டு தினம் காலை, மாலை 3 விராகனிடை வீதம் கொடுக்க மூலை சூடு தேக எரிவு கண் சூடு தேக காங்கை சகல உஷ்ண ரோகங்கள் குணமாகும்.

வெங்கிடேச எண்ணெய்:-

ஒரு சேர் சிற்றாமணக்கெண்ணெயில் ½ பலம் திருமஞ்சனப் பட்டை சூரணத்தை ரவியில் ஒரு நாள் வைத்து 8 விராகனிடை வீதம் 2 நாளைக்கு ஒரு தடவை சாப்பிட்டு மேலுக்கும் தடவி வர மேக ஊரல் கடி சொறி முதலியவைகள் தீரும். பத்தியம் புளி வாய்வு பதார்த்தங்கள் தள்ளவும்.

கால பயிரவ எண்ணெய்:-

சுத்தி செய்த சேங்கொட்டை 30. சுத்தி செய்த கெந்தகம் விராகனிடை.10 இவைகளைச் சேர்த்து வ படி சிற்றாமணக்கு எண்ணெயில் போட்டு எரித்து செங்கொட்டை வெடிக்கும் சமயத்தில் தயிலத்தை வடித்து பிசறித்து அ பங்குகளாக்கி ஒரு பங்கு வீதம் தினம் 2 தடவைவீதம் சாப்பிட்டு வர கண்டமாலை 18, மேகரணம், மேகஊறல், கைகா முடக்கு சூலை 18, கடிப்பு சொறி வெள்ளை விழுதல் குஷ்டம்.18, பெரும் வியாதி கிரந்தி.5, அரையாப்பு படர் தாமரை தடை வாளை லிங்க புற்று யோனிப் புற்று அனேக பயங்கரமான ரோகங்கள் தீரும். பத்தியம் உப்பு, புளி வாய்வு பதார்த்தங்களை நீக்கி பசும் பால் சேர்த்து சிற்றாமணக்கு எண்ணெய் தேய்த்து ஸ்நானம் செய்து வரவும்.

நார்த்தம் பழ ஷர்பத்து:-

நார்த்தம் பழம் வேண்டிய போது எடுத்து அதற்கு இரட்டிப்பு சர்க்கரை சேர்த்துக் காய்ச்சி வடி கட்டிக் கொள்ளவும். வ விராகனிடை முதல் பு விராகனிடை வரையில் எடுத்து கொஞ்சம் ஜலத்தில் கலந்து கொடுக்கலாம். பித்தம், தாகம், சுரம், வாந்தி அரோசிகம் இவையுள்ள காலங்களில் உபயோகிக்கலாம்.

சகல தோஷத்துக்கும் நசியம்:-

சுக்கு, மிளகு, திப்பிலி, சிறும்பு, அதந்தை, அதிமதுரம், நல்ல வெல்லம், அகத்தி பாலை வாட்டிச் சாறு எருக்கம் பழுப்பு வாட்டி சாறு யிவிலரைத்து நசியமிடவும். கை கண்டது.

தலை வலிக்கு:-மருந்து:-

குப்பை மேனி யிலை சூரியுதையத்தில் பறித்து வந்து கசக்கி செவியில் பிழிய நெடுநாள் தலைவலி போம். இது கை கண்டது.

மண்டை சூலைக்கு தயிலம்:-

கார்போக அரிசி ஒ. , கருஞ்சீரகம்.த. , நவச்சாரம்.து. கஸ்தூரி மஞ்சள். து. மிளகு பலம்.உ, பால் சாம்பிராணி பலம். சன்னி கோவை பலம்.உ எள்ள எண்ணெய் சேர்.உ கடுகு பதங் காய்ச்சி இறக்கவும்.

தாது விர்த்தி லேகியம்:-

அபினி.து.க, அக்கலாக் காரம் து.க, லவங்கம்ஏ.க, ஜாதிக்காய்.து.க, பால் சாம்பிராணி து.க, தேன் விட்டு மூன்று நாள் அரைக்கவும். சுண்டைக்காய் பிரமாண மாத்திரை செய்து சாப்பிடவும். அதற்கு மேல் பசுவின் பால் சாப்பிடவும்.

ரச பற்பம்:- மண் பாத்திரத்தில் ஒரு பலம் கெந்தகத்தை போட்டு காடாக்கினியா எரிக்க கெந்தகம் உருகும் சமயத்தில் 7 பலம் ரசத்தை விட்டு கிளறிக் கொண்டிருந்தால் ரசம் கெந்தகத்துடன் கலந்து கருத்த தூளாய் விடும். பிறகு வேறோர் பாண்டத்தில் வருத்த தூள் யாவையும் கொட்டி அதில் சிறு செருப்படை தழையின் ரசத்தை சுமார் கால் படி ரசத்தை சுத்தி மேல் அகல் மூடி சீலை மண் செய்து உலர்த்தி பெரிய மண் பாத்திரத்தில் பேர் பாதிக்கு மணல் கொட்டி அதின் மேல் உப்பு படி.1 தூள் செய்து கொட்டி சீல் செய்(
வைத்து அதின் மேல் உப்பு கொட்டி அதின் மேல் மணல் கொட்டி காலாக்கினியா எரிடவும் ரச பற்பமாகும்.

அரிசியிடை தேனிலாவது அல்லது பழைய வெல்லத்திலாவது கொடுக்கவும். மேகத்தாக்குகளுக்கு கொடுக்கலாம். ராமசாமி நாயுடு கை முறை:

<u>நாக பற்பம்:-</u>

நாகம் ஒரு கட்டியாக கொண்டு வந்து சுண்ணாம்பு கல்லை ஒரு மண் பாத்திரத்தில் கொட்டி அதில் நாக கட்டியை வைத்து அதின் பேரில் சுண்ணாம்பு கல்லை கொட்டி அதில் ஊத்திருல் வேகும். அதை எடுத்து தனியில் நடைக்க மறுபடியும் சுண்ணாம்பு கல் கொட்டி நாக கட்டி வைத்து அதின் பேரில் சுண்ணாம்பு கொட்டி சுத்தி மேலே அகல் மூடிருல் சுத்தி. இப்படி 7 தரம் செய்யவும். அப்போதான் சுத்தி. அந்த நாக கட்டியை எடுத்து அப்பிரேகத் தகட்டில் வைத்து அல்லது மண் பாத்திரத்திலாவது வைத்து அடுப்பின் பேரில் வைத்து சிவகரந்தை தழை சாறு படி1-ம் நாகக் கட்டியின் பேரில் சுருக்கு கொடுக்க கொடுக்க கொஞ்சம் கொஞ்சமாய் விட்டு வரவும். அது பற்பமாகும்: ராமசாமி நாயுடு கைமுறை.

****

கு.ச:16.2.63.

முற்றும்

****

Verified complete
6-4-63
Sundaramurthy
6-4-63

264